


PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்

# பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY




சென்னை மலர்: 01 இதழ்: 217 20.03.2026 வெள்ளிக்கிழமை

Chennai Volume: 01 Issue: 217 Friday pages 8 Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY

## இன்றைய நாள்

வெள்ளிக்கிழமை
(20-03-2026)
விசுவாவசு ஆண்டு, பங்குனி-6

பிறை: வளர்பிறை

திதி
துவிதியை மறுநாள் விடியற்காலை 4.28 வரை பிறகு திருதியை.

நட்சத்திரம்:
ரேவதி மறுநாள் விடியற்காலை 4.12 வரை பிறகு அசுவினி.

யோகம்
அமிர்தயோகம்

ராகுகாலம்
காலை 10.30-12.00 மணி

எமகண்டம்
பிற்பகல் 3.00 – 4.30 மணி.

சூலம் – மேற்கு.

நல்ல நேரம் :
காலை 6-7 மணி.
மாலை 5-6 மணி

| | |
|---|---|
| மேஷம் | பக்தி |
| ரிஷபம் | வெற்றி |
| மிதுனம் | கௌரவம் |
| கடகம் | இன்பம் |
| சிம்மம் | நிறைவு |
| கன்னி | பணிவு |
| துலாம் | இரக்கம் |
| விருச்சிகம் | மகிழ்ச்சி |
| தனுசு | நட்பு |
| மகரம் | சுகம் |
| கும்பம் | நலம் |
| மீனம் | சிறப்பு |

# இஸ்ரேல் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் ஈரான் உளவுத் துறை அமைச்சர் உயிரிழப்பு

## ஹார்முஸ் ஜலசந்தி அருகே 'பங்கர் பஸ்டர்' குண்டுகளை வீசியது அமெரிக்கா

**டெல் அவிவ், மார்ச் 20:**

இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஈரானின் உளவுத்துறை அமைச்சர் இஸ்மாயில் காதிப் உயிரிழந்துள்ளார். மேலும், ஹார்முஸ் ஜலசந்தி பகுதி அருகே 'பங்கர் பஸ்டர்' குண்டுகளை வீசி அமெரிக்கா தாக்குதல் நடத்தியது. இதனால் பதற்றம் அதிகரித்துள்ளது.

அமெரிக்க மற்றும் இஸ்ரேலிய படைகளுக்கும், ஈரானுக்கும் இடையில் கடந்த பிப்ரவரி 28-ம் தேதி முதல் போர் நடைபெற்று வருகிறது. இதனால், வளைகுடா நாடுகளிடையே பதற்றமான சூழல் நிலவி வருகிறது. இந்நிலையில், இஸ்ரேல் நடத்திய புதிய தாக்குதலில் ஈரானின் உளவுத் துறை அமைச்சர் இஸ்மாயில் காதிப் கொல்லப்பட்டதாக, இஸ்ரேலின் பாதுகாப்புத் துறை அமைச்சர் இஸ்ரேல் கட்ஸ் நேற்று அறிவித்துள்ளார். இதை ஈரான் அதிபர் மசூத் பெஸ்கியான் உறுதி செய்துள்ளார்.

இஸ்ரேல் நாட்டு அமைச்சர் இஸ்ரேல் கட்ஸ் மேலும் கூறும்போது, "ஈரானின் எந்தவொரு மூத்த தலைவரையோ அல்லது அதிகாரியையோ கொல்லும் அதிகாரத்தை இஸ்ரேல் ராணுவத்துக்கு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு வழங்கியுள்ளார். எந்தவித அனுமதியையும் பெறாமலேயே ஈரான் மீது தாக்குதல் மேற்கொள்ள பிரதமர் நெதன்யாகு எங்களுக்கு அனுமதி தந்துள்ளார். இதைத் தொடர்ந்து இஸ்ரேல் நடத்திய புதிய தாக்குதலில் ஈரான் உளவுத்துறை அமைச்சர் இஸ்மாயில் காதிப் உயிரிழந்துவிட்டார். இந்த உயிரிழப்பைத் தொடர்ந்து உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்து பல்வேறு ஆச்சரியமான தகவல்கள் வரலாம்" என்றார்.

ஏற்கெனவே, இஸ்ரேல், அமெரிக்கா ஆகிய நாடுகள் நடத்திய தாக்குதல்களில் ஈரானின் மூத்த பாதுகாப்பு அதிகாரி அலி லாரிஜானி மற்றும் பசிஜ் துணை ராணுவப் படையின் தலைவர் கோலம் ரெசா சுலைமானி ஆகியோர் நேற்று முன்தினம் கொல்லப்பட்டனர்.



இஸ்மாயில் காதிப்

மேலும், கடந்த பிப்ரவரி 28-ம் தேதி அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இணைந்து நடத்திய திடீர் தாக்குதலில் ஈரானின் தலைமை மதகுருவும், உச்சத் தலைவருமான அயத்துல்லா அலி காமேனி கொல்லப்பட்டார். இதையடுத்து ஈரானின் புதிய உச்சத் தலைவராக காமேனியின் மகன் மோஜ்தபா காமேனி பொறுப்பேற்றுள்ளார். அதனால் ஈரானில் ஆட்சி மாற்றம், தலைமை மாற்றம் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் எதிர்பார்ப்பது நடக்கவில்லை.

முன்னதாக ஈரான் மீதான தாக்குல் காரணமாக, ஹார்முஸ் ஜலசந்தி பகுதியை மூடுவதாக ஈரான் அறிவித்தது. இந்த வழியாக செல்லும் எண்ணெய் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டன. கச்சா எண்ணெய் போக்குவரத்து ஐந்தில் ஒரு பங்கு ஹார்முஸ் ஜலசந்தி வழியாக நடைபெறுவதால், இங்கு பாதுகாப்புப் பணியில் ஈடுபட போர்க் கப்பல்களை அனுப்பி நேட்டோ படைகள் உதவ வேண்டும் என அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கோரிக்கை விடுத்தார். அந்த கோரிக்கையை நேட்டோ நாடுகளின் தலைவர்கள் நிராகரித்தனர்.

இதையடுத்து அமெரிக்காவே நேரடியாக களத்தில் இறங்கியுள்ளது.

ஹார்முஸ் ஜலசந்தியை ஒட்டியுள்ள கரைப் பகுதிகளில் ஈரான் ஏவுகணை தளங்கள் பல உள்ளன. இங்கிருந்துதான் ஹார்முஸ் ஜலசந்தியில் செல்லும் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தப்படுகிறது. பாதாளத்தில்உள்ள இந்த ஏவுகணை கிடங்குகளை குறிவைத்து 2,200 கிலோ எடையுள்ள 'பங்கர் பஸ்டர்' குண்டுகளை அமெரிக்க ராணுவம் வீசியது.

இந்த குண்டுகள் பாதாள பகுதிகளை ஊடுருவி தாக்கும் திறன் படைத்தவை. இந்த குண்டுகளை ஈரான் மீது வெற்றிகரமாக வீசியதாக அமெரிக்க ராணுவம் எக்ஸ் தளத்தில் தெரிவித்துள்ளது. இதுபோன்ற தாக்குதலுக்கு தொடர்ந்து பதிலடி கொடுப்போம் என்று ஈரான் மீண்டும் எச்சரித்துள்ளது.

### இந்தியாவுக்கு நன்றி தெரிவித்தது ஈரான்

ஈரானில் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்தியா சார்பில் மருத்துவ உதவிப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டன. இவை புதன்கிழமை ஈரான் வந்து சேர்ந்ததாக டெஹ்ரானில் உள்ள இந்திய தூதரகம் உறுதி செய்துள்ளது.

இந்த உதவிப் பொருட்களை ஈரானில் உள்ள செம்பிறை சங்கம் பெற்றுக் கொண்டதாகவும் இந்த உதவிக்காக நன்றி தெரிவிப்பதாகவும் இந்தியாவில் உள்ள ஈரானிய தூதரகம் கூறியுள்ளது.

இதுகுறித்து டெல்லியில் உள்ள ஈரான் தூதரகம் 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "மதிப்பிற்குரிய இந்திய மக்களிடம் இருந்து பெற்ற மருத்துவ உதவிகளின் முதல் தொகுப்பு கொண்டு சேர்க்கப்பட்டுள்ளது. கனிவான இந்திய மக்களுக்கு மனமார்ந்த நன்றி தெரிவிக்கிறோம்" என்று கூறப்பட்டுள்ளது.

பிற நாடுகளுக்கு உதவி வழங்கும் ஒரு முக்கிய நாடாக சமீபத்திய ஆண்டுகளில் இந்தியா உருவெடுத்துள்ளது. அமெரிக்க - இஸ்ரேல் ராணுவ நடவடிக்கையின் தாக்கத்தால் ஈரான் போராடி வரும் வேளையில் இந்த உதவி வழங்கப்படுகிறது. இப்போர் தொடங்கியதில் இருந்து ஈரானில் 1,300-க்கும் மேற்பட்டோர் இறந்ததாகவும் 7,000-க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளதாகவும் ஜெனீவாவில் உள்ள ஐ.நா.வுக்கான ஈரான் தூதர் அலி பஹ்ரேனி கூறியுள்ளார்.

# அமெரிக்காவில் சட்டவிரோதமாக தங்கியுள்ளோர் சொந்த நாடு திரும்ப இலவச விமான டிக்கெட், ரூ.2.41 லட்சம் போனஸ்

**வாஷிங்டன், மார்ச் 20:**

அமெரிக்காவில் சட்டவிரோதமாக வசிப்பவர்களை அந்நாட்டு அரசு அவர்களது சொந்த நாடுகளுக்கு நாடு கடத்தி வருகிறது. இந்நிலையில் நேற்று ஒரு புதிய திட்டத்தை அமெரிக்க அரசு அறிவித்துள்ளது.


ஆவணங்கள் இல்லாத இந்தியாவில் இருந்து புலம் பெயர்ந்து அமெரிக்காவில் சட்டவிரோதமாக வசித்து வருவோர் இலவசமாக தங்கள் நாட்டுக்கு திரும்பிச் செல்வதற்காக இந்த திட்டத்தை அமெரிக்காவின் உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது. இந்தத் திட்டத்துக்கான அறிவிப்பில் தாஜ்மஹாலின் புகைப்படத்தை அந்தத் துறை பயன்படுத்தியுள்ளது.

இது குறித்து அமெரிக்க உள்நாட்டுப் பாதுகாப்புத் துறை சமூக வலைதளத்தில், "நீங்கள் ஒரு புதிய தொடக்கத்துடன் உங்கள் தாய் நாட்டுக்கு செல்லலாம். சிபிபி ஹோம் என்ற செல்போன் செயலியைப் பயன்படுத்தி நீங்களாகவே உங்கள் நாட்டுக்கு செல்ல முன்வரும் போது இலவச விமான டிக்கெட் மற்றும் வெளியேறுவதற்கான 2,600 அமெரிக்க டாலர்கள் (சுமார் ரூ.2.41 லட்சம்) போனஸ் தொகையைப் பெற்றிடுங்கள்" என்று குறிப்பிட்டுள்ளது. இந்த திட்டத்தை ஏற்றுக் கொண்டு வருவோருக்கு எந்தவித சட்டச் சிக்கலும் இல்லாமல் அவர்களை அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் ஆவணமின்றி சட்டவிரோதமாகத் தங்கியிருப்போரை கண்காணிப்பதற்கான செலவுகளைக் குறைக்கவும், காவல், நீதித்துறை அமைப்புகளின் மீதான அழுத்தத்தைக் குறைக்கவும், அதே நேரத்தில் முறைசார்ந்த நாடு கடத்தலுடன் தொடர்புடைய சட்டரீதியான தண்டனைகளைத் தனிநபர்கள் தவிர்க்கவும் இந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆனால், இந்தத் திட்டத்துக்கான அறிவிப்பில் இந்தியாவிலுள்ள தாஜ்மஹால் புகைப்படத்தை அச்சடித்துள்ளனர். இந்தத் திட்டத்தை வரவேற்கும் சிலர், தாஜ்மஹால் புகைப்படத்தை இந்தத் திட்டத்துக்கான அறிவிப்பில் அச்சிட்டது ஏன் என்றும் கேள்வி எழுப்புகின்றனர்.

மேலும், சுய நாடு கடத்தல் திட்டத்தின் மூலம் பணம் வழங்குதல் மற்றும் இலவசப் பயணத்துக்கான சலுகைகள் இக்கட்டான சூழலில் இருப்பவர்களை ஈர்க்கக் கூடும் என்று குறிப்பிட்டாலும், இத்தகைய திட்டங்கள் நீண்ட கால விளைவுகளை மறைக்கக்கூடும் என்று குடியேற்றப் பிரிவு வழக்கறிஞர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.



# 'யார் சொன்னாலும் நம்பாதீர்கள்' கூட்டணி இல்லை: விஜய் திட்டவட்டம்

**சென்னை, மார்ச் 20:**

செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரம் அருகேபூஞ்சேரியில் உள்ள தனியார் ஹோட்டலில், தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் நேற்று மாலை இஃப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் பங்கேற்ற விஜய் பேசியதாவது:

நாம் அரசியலுக்கு வந்ததில் இருந்ததில் இருந்து சில வதந்திகள் சொல்லப்படுகிறது. அந்த டீம்.. இந்த டீம் என்று சொன்னார்கள். ஆனால் மக்களின் டீம் என எல்லோருக்கும் தெரிந்துவிட்டது. அதன்பிறகு வேறு என்ன அவதூறு பரப்பலாம் என நினைந்து செயல்பட்ட போதும் அது நடக்கவில்லை. இப்படியான நேரத்தில்தான் இந்த கூட்டணி, அந்த கூட்டணிக்கு போகிறார் என பொய்யான பிரச்சாரத்தை செய்து கொண்டிருந்தார்கள். அந்த செய்தியையெல்லாம் கேட்டு நீங்கள் குழப்பம் அடைந்து இருப்பீர்கள்.

எனவே நான் மீண்டும் தெளிவாக சொல்கிறேன், நான்.. நாங்கள்.. எப்போதும் மதசார்பற்ற கொள்கை என்பதிலோ,



மதசார்பற்ற சமூக நீதி என்ற நிலைபாட்டிலோ சமரசம் வைத்துக்கொள்ள மாட்டோம். நம்முடைய தலைமையில்தான் ஆட்சி என்பதில் உறுதியாக இருக்கிறோம். நம்முடைய முதல் மாநாட்டில் யாருக்காகவும் எதற்காகவும் எந்தவிதமான சமரசமும் வைத்துக்கொள்ள போவதில்லை. யார் என்ன சொன்னாலும் நம்பாதீர்கள். எல்லாம் வல்ல இறைவனில் அருளால் நாம் நினைத்ததை நிச்சயம் அடைய முடியும். இஸ்லாமிய சகோதரர்களுக்கு எனது ரமலான் நல்வாழ்த்துக்கள். இவ்வாறு அவர் பேசினார்.

# தேர்தல் நாளில் ஊதியத்துடன் கூடிய விடுமுறை: தனியார் நிறுவனங்களுக்கு உத்தரவு

**சென்னை, மார்ச் 20:**

தமிழ்நாட்டில் தேர்தல் நாளில் ஊதியத்துடன் கூடிய விடுமுறை அளிக்குமாறு தனியார் நிறுவனங்களுக்கு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில் சட்டப்பேரவைக்கான தேர்தல் ஏப்ரல் 23 ஆம் தேதியில் நடைபெறவுள்ளது. தொடர்ந்து, மே 4 ஆம் தேதியில் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், தேர்தல் நாளில் (ஏப். 4) தனியார் நிறுவனங்கள், தனியார் தொழிற்சாலைகளில் ஊழியர்களுக்கு ஊதியத்துடன் கூடிய விடுமுறை வழங்க வேண்டும் என்று தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

வாக்காளர்கள், தங்கள் ஜனநாயக உரிமையை எந்தவிதத் தடையுமில்லாமல் பயன்படுத்துவதை உறுதி செய்யும்வகையிலும், எந்த அச்சமும் இல்லாமல் வாக்களிப்பதையும் நினைவில்கொண்டு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இதனை மீறும் நிறுவனங்கள் மீது தொழிலாளர் நலத்துறை மூலம் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தேர்தல் ஆணையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேலும், கேரளம், புதுச்சேரி, மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களிலும் அந்தந்த தேர்தல் தேதிகளில் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

# பெண் அரசு ஊழியர்கள் 3-வது குழந்தை பெற்றால் முழு ஊதியத்துடன் 12 வாரம் பேறுகால விடுப்பு

## தமிழக அரசு உத்தரவு

**சென்னை, மார்ச் 20:**

பெண் அரசு ஊழியர்கள் 3-வது குழந்தை பெற்றால், அவர்களுக்கு முழு ஊதியத்துடன் 12 வாரம் பேறுகால விடுப்பு அளிக்கப்படும் என தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில் பெண் அரசு ஊழியர்கள் 2 குழந்தைகளைப் பெற்றெடுப்பதற்கான பேறு காலத்துக்கு மட்டும் தலா ஓராண்டு (365 நாட்களுக்கு மிகாமல்) முழு ஊதியத்துடன் பேறுகால விடுப்பு அளிக்கப்படுகிறது. முதல் பிரசவத்தில் 2 இரட்டை குழந்தைகள் பெற்றாலும், 2-வது பிரசவத்துக்கும் ஓராண்டு விடுப்பு அளிக்கப்படுகிறது. 3-வது குழந்தை பெறும்போது, அவர்களுக்கு பேறுகால விடுப்பு அளிப்பதில்லை.

இந்த நிலையில், 3-வது குழந்தை பெறவும் பேறுகால விடுப்பு அளிக்கக்கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் பெண் அரசு ஊழியர்கள் வழக்கு தொடர்ந்தனர். இதைத் தொடர்ந்து, உயர் நீதிமன்றம் கடந்த ஜன.21-ம் தேதி பிறப்பித்த உத்தரவு விவரம்:

உச்ச நீதிமன்றம் கடந்த 2025 மே 23-ம் தேதி வழங்கிய தீர்ப்பில், "விடுப்பு வழங்குவதற்கான குழந்தைகள் பெறும் உச்ச வரம்பை நிர்ணயிக்க கூடாது. 3-வது குழந்தைக்கு வேண்டுமானால், தேசிய




அளவில் 26 வாரங்கள் பேறுகால விடுப்பு என்பதை 12 வாரமாக குறைக்கலாம். பிரசவ தேதிக்கு 6 வாரம் முன்பாக விடுப்பு அளிக்க வேண்டும்" என்று உத்தரவு பிறப்பித்திருந்தது. இந்த உத்தரவை தமிழக அரசு செயல்படுத்த வேண்டும் என்று உத்தரவிட்டு, உயர் நீதிமன்றம் வழக்கை முடித்து வைத்தது.

இதன் அடிப்படையில் தமிழக அரசு, அடிப்படை விதிகளில் திருத்தம் செய்து, மார்ச் 13-ம் தேதி அரசாணை வெளியிட்டுள்ளது. அதில், 'பெண் அரசு ஊழியர்கள் முதல் 2 குழந்தைகளைப் பெற்றெடுக்கும் காலத்தில் பேறுகால விடுப்பு முழு ஊதியத்துடன் தலா ஓராண்டும், 2 குழந்தைகளுக்கு மேல் பெற்றால், அந்த பேறுகாலத்துக்கு முழு ஊதியத்துடன் 12 வாரம் பேறுகால விடுப்பும் அளிக்கப்படும்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



## சீனாவுக்கான இந்திய தூதராக விக்ரம் துரைசாமி நியமனம்



சென்னை, மார்ச்20:

சீனாவுக்கான புதிய இந்தியத் தூதராக மூத்த அதிகாரி விக்ரம் கே. துரைசாமி(56) நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்திய வெளியுறவு அமைச்சகம் இதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

விக்ரம் துரைசாமி இதற்கு முன்பு வங்கதேசத்தில் இந்திய உயர் ஆணையராகவும், உஸ்பெகிஸ்தான் மற்றும் தென்கொரியாவில் இந்தியத் தூதராகவும் பணியாற்றியுள்ளார்.

தற்போது பிரிட்டன் இந்திய உயர் ஆணையராகப் பணியாற்றி வருகிறார்.

பிரதமர் அலுவலகத்தில் தனிச் செயலாளராகவும், வெளியுறவு அமைச்சகத்தில் சார்க் மற்றும் இந்தோ-பசிபிக் பிரிவுகளின் தலைவராகவும் பணியாற்றிய அனுபவம் இவருக்கு உண்டு.

இவர் ஹாங்காங் சீனப் பல்கலைக்கழகத்தில் சீன மொழியில் சிறப்புப் பயிற்சி பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது

1992-ஆம் ஆண்டு பேட்ச் ஐ.எஃப்.எஸ் அதிகாரியான இவர், பிரதீப் குமார் ராவத்திற்குப் பிறகு பெய்ஜிங்கில் பொறுப்பேற்பார்.

தமிழகத்தை சேர்ந்த விக்ரம் துரைசாமியின் தந்தை வங்கதேச போரில் பங்கேற்ற விமானப்படை வீரர் ஆவார்.

### புதுக்கோட்டை போலீஸ் சூப்பிரண்டு அலுவலகம் அருகே

## பியூட்டி பார்லர் உரிமையாளர் வீட்டில் 30 பவுன் நகை கொள்ளை



புதுக்கோட்டை, மார்ச் 20:

புதுக்கோட்டை மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அலுவலகத்திற்கு பின்புறம் அமைந்துள்ள கலீப் நகர் 1-ம் வீதியைச் சேர்ந்தவர் சரவணன். இவர் புதுக்கோட்டையில் சலூன் கடை மற்றும் பியூட்டி பார்லர் வைத்து நடத்தி வருகிறார்.

இதற்கிடையே அவருக்கு கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு திடீரென்று மாரடைப்பு ஏற்பட்டது. இதையடுத்து அவரது உறவினர்கள் புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அவருக்கு உதவியாக அவரது மனைவியும் மருத்துவமனையில் தங்கியிருந்து கவனித்து வருகிறார்.

சரவணனின் பிள்ளைகள் அருகில் உள்ள அவரது உறவினர் வீட்டிற்கு சென்று அங்கே தங்கியுள்ளனர். கலீப் நகரில் உள்ள வீடு பூட்டப்பட்டு கிடந்தது. யாரும் அங்கு செல்லவில்லை. இந்நிலையில் இன்று அதிகாலை அவர்களது வீட்டின் பூட்டு உடைக்கப்பட்டு கிடந்தது.

இதைப்பார்த்த அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் உடனடியாக ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் சரவணன் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு தெரிவித்தனர். அதன்பேரில் வீட்டு உரிமையாளர்கள் வந்து பார்த்தபோது வீட்டின் கதவு உடைக்கப்பட்டு பீரோவும் உடைக்கப்பட்டு இருந்தது.

மேலும் பீரோ லாக்கரில் இருந்த 30 பவுன் தங்க நகைகள் கொள்ளை போயிருந்ததும் தெரியவந்தது. இதுகுறித்த புகாரின் பேரில் போலீசார் விரைந்து வந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் மர்மநபர்கள் வீட்டின் பூட்டை உடைப்பதற்காக கொண்டு வந்த இரும்பு ராடையும், உடைத்த கேட்டையும் சரவணன் வீட்டின் அடுப்பறையில் வைத்து விட்டு சென்றுள்ளனர்.

போலீஸ் சூப்பிரண்டு அலுவலகத்திற்கு பின்புறமுள்ள வீட்டிலேயே அச்சமின்றி கொள்ளையர்கள் புகுந்து நகைகளை திருடிச் சென்ற சம்பவம் புதுக்கோட்டையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

### மாணவி கொலை வழக்கு:

## பொதுமக்களுக்கு உண்மை தெரிய வேண்டும் கேள்விகளை எழுப்பும் அண்ணாமலை




சென்னை, மார்ச் 20:

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திக்குளத்தில் பிளஸ்-2 மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொடூரமாக கொலை செய்யப்பட்ட வழக்கில் தர்மமுனீஸ்வரன் என்பவனை போலீசார் இன்று கைது செய்துள்ளனர். இதுதொடர்பாக பா.ஜ.க. மாநில முன்னாள் தலைவர் அண்ணாமலை பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளார். அவர் எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் வேடநத்தம் கிராமத்தில், பன்னிரண்டாம் வகுப்பு பள்ளி மாணவியை பாலியல் தாக்குதல் நடத்தி, கொடூரமாகக் கொலை செய்தும், பத்து நாட்கள் கடந்தும், காவல்துறை குற்றவாளியைக் கைது செய்யவில்லை.

குற்றவாளியைக் கைது செய்ய வலியுறுத்தி, பொதுமக்களின் கடுமையான போராட்டங்கள் தொடர்ந்து வரும் நிலையில், சாயல்குடியைச் சேர்ந்த தர்ம முனீஸ்வரன் என்ற நபரைக் கைது செய்திருப்பதாக, திமுக அரசின் காவல்துறை அறிவித்திருக்கிறது. ஆனால், இதில் பல கேள்விகள் எழுகின்றன.

கடந்த 2020 ஆம் ஆண்டு, தூத்துக்குடி எட்டயபுரம் அருகே 65 வயது முதிர்ந்த பெண்மணியை, பாலியல் தாக்குதலுக்குள்ளாக்கி கொலை செய்த வழக்கில், கடந்த 2022 ஆம் ஆண்டு, சாயல்குடியைச் சேர்ந்த தர்ம முனீஸ்வரன் என்ற நபர் கைது செய்யப்பட்டார். வழக்கு முடிவில், கடந்த 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் அவருக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது.

இந்த நிலையில், மாண்புமிகு உச்சநீதிமன்றத்தில், அந்த வழக்கு நிறுத்தி வைக்கப்பட்டதாகவும், அவருக்கு ஜாமின் வழங்கப்பட்டதாகவும், தற்போது செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

ஒரு வயதான பெண்மணியை, பாலியல் தாக்குதலுக்கு உள்ளாக்கி கொலை செய்து ஆயுள் தண்டனை பெற்ற குற்றவாளிக்கு, உச்சநீதிமன்றத்தில் ஜாமின் கிடைக்கும் அளவுக்கு, திமுக அரசு அந்த வழக்கை மெத்தனமாகக் கையாண்டிருக்கிறது.

மறுபக்கம், பல வழக்குகள் கொண்ட ஒரு சரித்திரப் பதிவேடு குற்றவாளி, ஜாமினில் வெளிவரும்போது, அவனைத் தொடர்ந்து கண்காணிக்காமல் தமிழகக் காவல்துறை இருந்திருக்கிறது.

மேலும், சிசிடிவி காட்சிகள் மூலம் இந்தக் குற்றவாளியைப் பிடித்ததாகக் கூறும் காவல்துறை, சிசிடிவியை ஆராய பத்து நாட்கள் எடுத்துக் கொண்டது என்பதும் கேள்விக்குரியதே.

பொதுமக்களுக்கு உண்மை தெரிய வேண்டும். காவல்துறைக்குப் பொறுப்பான முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், இதற்கு பொதுமக்களிடம் விளக்கமளிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

## திருச்செந்தூர் கோவிலில் அலைமோதிய பக்தர்கள் கூட்டம்: 5 மணி நேரம் காத்திருந்து சாமி தரிசனம்



திருச்செந்தூர், மார்ச் 20:

முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் நாள் தோறும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வந்து சாமி தரிசனம் செய்து செல்வது வழக்கம்.

இக்கோவிலில் வழக்கமாக திருவிழா நாட்கள், விடுமுறை நாட்கள் குறிப்பாக ஞாயிறு விடுமுறை நாட்களில் பக்தர்கள் கூட்டம் அதிகமாக காணப்படும்.

இந்த நிலையில் நேற்று தெலுங்கு வருடப்பிறப்பு அரசு விடுமுறை நாளாகும். இதனால் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் நேற்று காலையில் இருந்தே கோவிலில் குவிந்த வண்ணம் உள்ளனர். இவர்கள் கடல் மற்றும் நாழிக்கிணறு புனித தீர்த்தத்தில் நீராடினர்.

பின்னர் பக்தர்கள் கோவிலில் நீண்ட வரிசையில் சுமார் 5 மணி நேரத்துக்கு மேல் காத்திருந்து சாமி தரிசனம் செய்து வருகின்றனர். இதனால் கோவில் வளாகம், கடற்கரையில் பக்தர்கள் கூட்டமாக காணப்படுகிறது.

## ‘தேர்தல் பணியை கொடுத்து தேனிலவை கெடுத்துவிடாதீர்கள்’- மாவட்ட கலெக்டரிடம் நூதன கோரிக்கை வைத்த ஆசிரியை



கன்னியாகுமரி, மார்ச் 20:

கேரளம் மாநில சட்டமன்றத்தின் பதவிக்காலம் வருகிற மே மாதம் 23-ந்தேதியுடன் முடிவடைகிறது. இதனால் புதிய சட்ட மன்றத்துக்கான தேர்தல் அடுத்த மாதம்(ஏப்ரல்) 9-ந்தேதி நடைபெற உள்ளது.

தேர்தலுக்கு இன்னும் 40 நாட்களே இருப்பதால் தேர்தல் நடத்துவதற்கான பணிகளில் தேர்தல் ஆணையம் மற்றும் மாநில அரசுத்துறை அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். மேலும் தேர்தலில் போட்டியிடும் அனைத்து அரசியல் கட்சியினரும் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தேர்தலில் வாக்குப்பதிவு, வாக்கு எண்ணிக்கை உள்ளிட்ட அனைத்து பணிகளிலும் அரசு பள்ளி-அரசு உதவி பெறும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள். அதற்காக அவர்களுக்கு தனியாக ஊதியமும் வழங்கப்படும்.

தேர்தல் பணிக்கு ஏராள மானோர் தேவைப்படுவார்கள் என்பதால் பெரும்பாலான அரசு ஊழியர்கள் தேர்தல் பணிக்கு அனுப்பப்படுவார்கள். அரசால் தேர்தல் பணிக்கு நியமிக்கப்படுபவர்கள் கட்டாயமாக அதற்கு சென்று தான் ஆக வேண்டும் என்பதால் அந்த பணியை தவிர்க்க முடியாது.

உடல்நலம் பாதிப்பு உள்ளிட்ட தவிர்க்க முடியாத சூழ்நிலை காரணமாக தேர்தல் பணிக்கு செல்ல முடியாது என்றால் அது தொடர்பாக உரிய விளக்கத்தை அதிகாரிகளிடம் கொடுக்கவேண்டும். இந்தநிலையில் கேரளம் மாநிலத்தில் ஆசிரியை ஒருவர், மாவட்ட தேர்தல் அதிகாரியான மாவட்ட கலெக்டரிடம் நூதன கோரிக்கையை வைத்துள்ளார்.

அதாவது தனக்கு விரைவில் திருமணம் நடக்க இருப்பதாகவும், தேனிலவுக்கு திட்டமிட்டிருக்கும் நாளில் தேர்தல் வாக்குப்பதிவு நடைபெறுவதால் தனக்கு தேர்தல் பணியை வழங்கி தனது தேனிலவை கெடுத்து விடக் கூடாது என்று வலியுறுத்தி உள்ளார்.

கேரள மாநிலம் கொச்சி அருகே உள்ள காக்கநாடு பகுதியை சேர்ந்த இளம்பெண் ஒருவர் ஆசிரியையாக பணியாற்றி வருகிறார். அவருக்கும், திருவனந்தபுரம் இன்போபார்க் நிறுவனத்தில் பணியாற்றும் ஒரு வாலிபருக்கும் கடந்த சில மாதங்களுக்கு முன்பு திருமணம் நிச்சயிக்கப்பட்டுள்ளது.

அவர்களது திருமணம் வருகிற 29-ந்தேதி நடைபெற உள்ளது. திருமணத்திற்கான ஏற்பாடுகளை மணமகள் மற்றும் மணமகன் வீட்டார் தீவிரமாக செய்து வருகின்றனர். திருமணம் முடிந்ததும் ஆசிரியை மற்றும் அவரது கணவர் ஏப்ரல் 7-ந்தேதி முதல் 11-ந்தேதி வரையிலான 5 நாட்கள் தேனிலவுக்கு வெளிமாநிலத்துக்கு செல்கிறார்கள்.

அதற்கான பயணத் திட்டத்தை பல நாட்களுக்கு முன்பே திட்டமிட்டுவிட்டார்கள். இதற்காக பயணச்சீட்டு மற்றும் தங்குவதற்கான அறை உள்ளிட்டவைகளை முன்பதிவு செய்துவிட்டனர். இந்தநிலையில் தான் கடந்த சில நாட்களுக்கு முன்பு சட்டசபைக்கான தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டது.

ஆசிரியை தனது கணவருடன் தேனிலவுக்கு செல்ல திட்டமிட்டிருக்கும் நாளிலேயே கேரளத்தில் தேர்தல் வாக்குப்பதிவு நடைபெறுகிறது. ஆகவே தனக்கு தேர்தல் பணி வழங்கிவிடக்கூடாதே என்ற அச்சம் ஆசிரியைக்கு ஏற்பட்டது.

இதையடுத்து அவர், திருமணம் நடைபெற இருப்பதால் தனக்கு தேர்தல் பணி வழங்கக்கூடாது என்று மாவட்ட தேர்தல் அதிகாரியான கலெக்டரை சந்தித்து மனு கொடுப்பதற்காக கொச்சியில் உள்ள மாவட்ட கலெக்டர் அலுவலகத்துக்கு வந்தார். அவரது மனுவில் தேர்தல் பணி என்ற பெயரில், ஏற்கனவே திட்டமிடப்பட்ட தனது தேனிலவு பயணம் தடைபட்டுவிடக்கூடாது என்று கூறியிருந்தார். ஆனால் ஆசிரியை வந்த நேரத்தில் அலுவலகத்தில் கலெக்டர் இல்லை. அவர் தேர்தல் பணி தொடர்பாக வெளியே சென்றுவிட்டார்.

இதனால் தனது கோரிக்கை மனுவை ஆசிரியையால் கலெக்டரிடம் நேரில் கொடுக்க முடியவில்லை. மிகவும் முக்கியமான கோரிக்கை என்பதால் மாவட்ட தேர்தல் அதிகாரியான கலெக்டரிடம் நேரில் வழங்கி கூறினால் தான் நடக்கும் என்று ஆசிரியை கருதினார்.

## திருப்பதியில் ரூ.10 லட்சம் மதிப்பிலான தங்க செயினை விட்டு சென்ற சென்னை பக்தர்



சென்னையை சேர்ந்த அன்பு என்பவர் தனது குடும்பத்தினருடன் திருப்பதி கோவிலுக்கு சென்றார்.

திருப்பதி மலையில் உள்ள தேவஸ்தான அறையில் தங்கினார். குளியலறையில் குளிக்க சென்ற போது தனது கழுத்தில் இருந்த தங்கச் செயினை எடுத்து கொக்கியில் மாட்டி குளித்தார்.

பின்னர் தங்கச் செயினை மறந்து விட்டு சென்னைக்கு திரும்பினார். வீட்டிற்கு வந்து பார்த்தபோது கழுத்தில் செயின் இல்லாததை கண்டு திடுக்கிட்டார். அப்போதுதான் குளியல் அறையில் தங்கச் சங்கலியை மாட்டியது நினைவுக்கு வந்தது.

அதற்குள் தேவஸ்தான ஊழியர்கள் அன்பு தங்கியிருந்த அறையை சுத்தம் செய்ய சென்றனர். அப்போது அங்குள்ள குளியல் அறையில் இருந்த தங்க செயினை மீட்டு தேவஸ்தான அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

அதிகாரிகள் பதிவேட்டில் எழுதப்பட்டு இருந்த செல்போன் எண்ணை வைத்து அன்புக்கு தகவல் தெரிவித்தனர். அன்பு திருப்பதி தேவஸ்தான அலுவலகத்திற்கு சென்று ரூ.10 லட்சம் மதிப்புள்ள தங்கச் செயினை பெற்றுக் கொண்டார். அவர் தேவஸ்தான அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

## திருவதிகை வீரட்டானேஸ்வரர் கோவிலில் சசிகலாவின் அண்ணன் சாமி தரிசனம் சசிகலா பெயரில் அர்ச்சனை



பண்ருட்டி, மார்ச் 20:

மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா தோழி சசிகலாவின் சகோதரரும், அண்ணா திராவிடர் கழக பொதுச்செயலாளரும், டிடிவி. தினகரனின் மாமாவுமானவர் வி.கே. திவாகரன்.

இவர் மன்னார்குடியில் இருந்து புறப்பட்டு கடலூர் மாவட்டம் பண்ருட்டி திருவதிகையில் உள்ள பிரசித்தி பெற்ற வீரட்டானேஸ்வரர் கோவிலுக்கு காரில் திடீரென வருகை தந்தார். அவரை கோவில் குருக்கள் வரவேற்று அழைத்துச் சென்றனர்.

மூலவர் சாமி சன்னதியில் அவர் சசிகலா பெயரில் அர்ச்சனை செய்தார். பின்னர் அம்பாள் பெரிய நாயகி சன்னதிக்கு சென்று அங்கும் சசிகலா பெயரில் அர்ச்சனை செய்து வழிபட்டார். இதனை தொடர்ந்து கோவிலை வலம் வந்து வராகி அம்மன் சன்னதியில் அர்ச்சனை செய்து சாமி கும்பிட்டு சென்னைக்கு காரில் புறப்பட்டு சென்றார். தேர்தல் நேரத்தில் அவரது வருகை அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

## விளாத்திக்குளம் மாணவி கொலை வழக்கு- வாலிபர் கைது

தூத்துக்குடி, மார்ச் 20:

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திக்குளம் பகுதியை சேர்ந்த பிளஸ்-2 மாணவி பாலியல் வன்கொடுமை செய்து கொடூரமாக படுகொலை செய்யப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதனிடையே, மாணவி கொலை குற்றவாளிகளை உடனடியாக கைது செய்யவும், விசாரணையை முறையாக நடத்தவும் இந்த வழக்கை சி.பி.ஐ.க்கு மாற்றி உத்தரவிட வேண்டும், மாணவியின் குடும்பத்தினருக்கு ரூ.50 லட்சம் இழப்பீடு வழங்கவும், இந்த கொலை வழக்கின் நிலை குறித்து அறிக்கை தாக்கல் செய்ய போலீசாருக்கு உத்தரவிட வேண்டும். இந்த வழக்கு விசாரணையை கண்காணிக்க ஓய்வு பெற்ற ஐகோர்ட்டு நீதிபதியை நியமிக்க வேண்டும் என்று தூத்துக்குடி மாவட்டம் ஆ.குமாரபுரத்தை சேர்ந்த வக்கீல் மாரீஸ்வரி, உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மனு தாக்கல் செய்து இருந்தார். இம்மனு மீதான விசாரணையின் போது, மாணவி கொலை வழக்கில் குற்றவாளிகளை கண்டு பிடிக்கும் வகையில் சந்தேகத்துக்கு இடமான 5 பேரிடம் ரத்த மாதிரி சேகரிக்கப்பட்டு டி.என்.ஏ பரிசோதனைக்கு அனுப்பப்பட்டு உள்ளதாக அரசு தகவல் தெரிவித்தது.

இதனிடையே, குற்றவாளியை கைது செய்யும் வரை போராட்டம் தொடரும் என தெரிவித்து மாணவியின் உறவினர்கள் ஒருவாரமாக போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், மாணவி பாலியல் கொலை வழக்கில் முனீஸ்வரன் என்பவனை போலீசார் கைது செய்துள்ளனர். செல்போன் சிக்னலை வைத்து ஆய்வு செய்து அதன் அடிப்படையில் சாயல்குடியைச்சேர்ந்த 30 வயதான முனீஸ்வரன் கைதாகி உள்ளான்.

## “விஜய் மீதான நம்பிக்கை போய்விட்டது, ஏனெனில்...” திமுகவில் இணைந்த ரஞ்சனா நாச்சியார் விவரிப்பு



சென்னை, மார்ச் 20:

“விஜய் ஒரு பெரிய அரசியல் தலைவராக வருவார் என்ற நம்பிக்கைகளை போய்விட்டது. அதனால் அந்தக் கட்சியிலிருந்து வெளியே வந்துவிட்டேன்” என தவெகவில் இருந்து விலகி திமுகவில் இணைந்த ரஞ்சனா நாச்சியார் தெரிவித்தார்.

தமிழக வெற்றிக் கழகத்தில் மகளிரணி நிர்வாகியாக இருந்த நடிகை ரஞ்சனா நாச்சியார், அக்கட்சியில் இருந்து விலகி முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில் திமுகவில் இணைந்தார். இதற்கு முன்பு பாஜகவில் இருந்த ரஞ்சனா, சில மாதங்களுக்கு முன்பாக தவெகவில் இணைந்தார்.

இந்தச் சூழலில், விஜய் - சங்கீதா விவாகரத்து விவகாரம் தொடர்பாக விஜய் மீது ரஞ்சனா நாச்சியார் பல்வேறு விமர்சனங்களை பொதுவெளியில் முன்வைத்தார். இதனையடுத்து, அவர் தவெகவில் இருந்து விலகி இன்று திமுகவில் தன்னை இணைத்துக் கொண்டார்.

திமுகவில் இணைந்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ரஞ்சனா நாச்சியார், “எனது எண்ணங்களும், எனது கொள்கைகளும் இணைந்து பயணிக்க கூடிய இயக்கம் திமுக. அந்த வகையில் திமுகவில் இணைந்துள்ளேன். எங்கள் பாரம்பரியத்தை சேர்ந்த வேலு நாச்சியாரை கொள்கை தலைவராக விஜய் அறிவித்ததால் திமுகவில் இணைந்தேன்.

ஆனால், தவெகவில் தொடர்ந்து பெண்கள் புறக்கணிப்பும், அவமரியாதையும் நடந்துகொண்டுள்ளது. பெண்கள் பாதுகாப்பை திமுகவைத் தவிர வேறு எந்தக் கட்சியாலும் கொடுக்க முடியாது. தேர்தலுக்கு 30 நாட்களே உள்ள நிலையில், இன்னமும் விஜய்யால் மக்களை சந்திக்க வெளியே வரவில்லை. அவரால் இனியும் வெளியே வரமுடியாது என்பது தெரிகிறது. ஏதாவது பிரச்சினை என்றால் விஜய்யும் வரமாட்டார், நிர்வாகிகளும் ஓடி ஒளிந்துக் கொள்வார்கள்.

தேர்தல் நெருங்கும் நேரத்தில் கூட தவெகவினர் மக்களிடம் செல்லவில்லை. மேடைப் பேச்சுக்கு 4 பேர் இருந்தால் கட்சியை நடத்தி விடலாம் என தவெக நினைக்கிறது. பொறுக்கித் தனம் செய்வது அல்ல அரசியல், பொறுப்போடு நடந்துகொள்வதே அரசியல். விஜய் ஒரு பெரிய அரசியல் தலைவராக வருவார் என்ற நம்பிக்கைகளை போய்விட்டது. அதனால் அந்தக் கட்சியிலிருந்து வெளியே வந்துவிட்டேன்.

மதவாத கட்சியோடு சேர்ந்து பயணிக்க மாட்டோம் என விஜய் சொல்கிறார். ஆனால், ஆதவ் அர்ஜுனா கூட்டணி பேச்சுவார்த்தை நடந்ததாக சொல்கிறார். இதில் எதனை நம்புவது? ஆதவ், ஜான் ஆரோக்கியசாமி, புஸ்ஸி ஆனந்தை வைத்து கட்சியை நடத்தலாம் என விஜய் நினைப்பது முட்டாள்தனம். தவெக ஒரு மர்மமான முறையில்தான் நடக்கிறது. பொய் நம்பிக்கைகளை விதைத்து மக்களை தவறாக வழிநடத்துகிறது தவெக” என்றார் ரஞ்சனா நாச்சியார்.

செக்யூரிட்டி கார்டுகள் தேவை

கோடம்பாக்கம் சேத்துப்பட்டு புரசைவாக்கம் கோட்டூர்புரம் பகுதிகளில் வேலை செய்ய செக்யூரிட்டி கார்டுகள் தேவை

அணுகவும்: 9840861539

ADVERTISE WITH US

CONTACT US 9438610756

WANTED: FEMALE ANCHORS

- Age 18 to 35
- Good Looking
- Work from Home (Full-time/Part-time)

Salary: Rs. 20,000 to 50,000

Call / Whatsapp: 7789941009 9337501889

சிவா விஷ்ணு திருமண தகவல் மையம்

அனைத்து இனத்தவர்களுக்கும் முதல் மணம் • மறுமணம் பொருத்தமான ஜாதகங்கள் அனுப்பப்படும்

மணமகன் • மணமகள் தேவைப்படும் அனைவருக்கும் நம்பகமான மற்றும் விரைவான சேவை

✓ அனைத்து இனத்தவர்களுக்கும் பதிவு
✓ ஜாதக பொருததம் பார்த்து அனுப்பப்படும்
✓ முதல் திருமணம் & மறுமணம் வசதி
✓ உடனடி தொடர்பு & சிறந்த பொருத்தம்

தொடர்புக்கு: 9150989424

Special Invitation

to retired seniors house wives businessmen bankers CAs NRIs age.30 to 70.qualification SSLC/graduate

To restart your second Innings with a career business opportunity

♦ Flexible timing unlimited incentive

♦ No target work from home training provided For successful business.

Contact Mr. Irudaya Raj Ph.9486634780

Vilambaram

We provide Targeted Leads to grow your buisness

Boost your business

Call:: 91 7789941009, 9337501889 www.vilambaram.com

keerthi foundation

De Addiction Cum Rehabilitation Centre

INTERNSHIP & JOB OPPORTUNITIES MSW & M.Sc Psychology - Freshers

Internship: Clinical Training, Counseling Practice, Case Work

Jobs: Social Worker, Jr Psychologist, Rehab Counselor

Build Your Career in De-Addiction & Mental Health Care

Call: 9841945060 | 7845027710

www.keerthifoundation.com

ADIYOGI

REAL ESTATE WHOLESALE

VADACHENNAI CALL DRIVER

ஆதியோகி ரியல் எஸ்டேட்

CMDA DTCP அப்ரூவல் வீட்டுமனைகள் விற்பனை

_CONTACT_

8939228901

WANTED

JAY SECURITY FORCE

பணி வாய்ப்புகள்

- பணிகள்: A.S.D செக்யூரிட்டி கார்டுகள் ஹவுஸ் கீப்பிங்
- இடங்கள்:
  - பெருங்குடி, துரைப் பாக்கம்
  - காரப்பாக்கம், சோழிங்கநல்லூர்
  - விருகம்பாக்கம்

பெண்கள் தேவை

சம்பளம்:- 12500 முதல் 20000 வரை

9791061354 - 8072969599

Head office

NO :1, அம்பாள் அவின்யூ, வி.பி.ஜி அவின்யூ, விரிவாக்கம், மேட்டுக்குப்பம்- சென்னை-97

PREMIUM LAND SALE NEAR PARANDUR AIRPORT

YOU ARE LUCKY! Grab Your Future Investment Today!

Location: Just 6 KM Near Parandur New Airport

Price Details: ₹700 to ₹2200 per Sq.Ft — Affordable & High Return Investment

Why Invest Here?
✓ Fast Developing Area
✓ Near Upcoming Airport
✓ Excellent Appreciation Value
✓ Suitable for Residential & Investment
✓ Easy Road Access

PLOTS AVAILABLE NOW! Contact: CT. Guruji Phone: 90031 32847

LIMITED PLOTS – BOOK NOW!

WANTED

Site Supervisor required for construction work in Ambattur

Contact: 8428872887

WANTED

Needed female staff to look after children, patients.

Contact 9150989424

SEVEN STARS LOGISTICS PVT.LTD.

We Build Perfection

we simplify shipping for your business

Our Services are ... Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.

# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.

+91 44 43570909 +91 96770 88843

info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com

just499®

MLM SOFTWARE

All Types of MLM Software Solutions Available

Binary Unilevel Matrix Board Generation ROI / Investment

ONLY Rs. 499

Website: just499.com

Phone/WhatsApp: 7789951009

Email: orderjust499@gmail.com

Sri Manjal Mart

தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க

20% OFF

www.manjalmart.com 7789951009 order@manjalmart.com

THE BEST CENTRE OF CAR WASH

SADHANA DEVI.K

SUPREME Car Wash & Detailing

- Car Foam Pressure Wash
- Teflon Coating
- Ceramic Wax Treatment
- Under Chassis Painting
- Interior Foam Wash / Stain Remover
- Paint Correction / Protection

We Done Here

9840882711 7200043675 Supremecarwashchennai@gmail.com

No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.

WANTED

M/F லோடுமேன்,பிக்கர், ஹெைவப்ர், வர/மாத சம்ப்ளம்: 450-700. உணவு இடம் free day/N8 shift

7540003588

அருள்தரும் தெய்வம் என்றும் நம் இல்லங்களில்

தமிழ் மாதமிருமுறை இதழ்

அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..

www.arultharumdeivam.com

WANTED

Retd, VRS, Home Makers, NRIs, Business Person

Contact 8248951872



# கவிதை அரங்கம்!



நீ அணைத்தவுடன்
என் இதயம் உருகும்
ஆனால் உன் முத்தத்தில்
என் ஆத்மாவே எரிகிறது

உலகம் முழுதும்
மறைந்தாலும்
என் இதயத்தின் இடுக்கில்
நீ என்றும் ஒளிவழி

இருவர் இடையிலான
தூரம் குறைய
நேரம் கூட ஈரமாக
உருகுகிறது

மின்னல் போல
தொடும் அணைப்பு
அந்த அனுபவம்
வாழ்நாள் முழுவதும்
எரியும்

தோளில் சாய்ந்து
உருகும் கணம்
ஆயிரம் பிரபஞ்சங்களை
மறந்து விடும்

# வாழ்க்கை தத்துவம்...



பணம் - இருப்பவனை
தூங்க விடாது
பணம் - இல்லாதவனை
வாழ விடாது

எதிலும் அளவோடு
இருந்தால் அசிங்கப்பட
தேவையில்லை

கவலைப்படுவதால் மனதின் ஆற்றலும்
உயிரின் சக்தியும் வீணாகிறது
எதிலும் அளவறிந்து வாழப்
பழகினால் சிக்கலுக்கு இடமிருக்காது


எதையும் சாதிக்க விரும்பும்
மனிதனுக்கு நிதானம் தான்
அற்புதமான ஆயுதமே தவிர
கோபம் இல்லை

# ரமலான் பெருவிழா



ஹமிதாவுக்கு துக்கம் பொங்கி வந்தது. போன பழ வருடம் வாப்பாவின் விரல் பிடித்து கடைத்தெருவில் அலைந்து திரிந்ததும், உம்மா செய்த மட்டன் பிரியாணியும் நினைவில் வந்து போயிற்று. இப்போது அவர்கள் சவுதி அரேபியாவில் வேலைக்கு சென்றுள்ளனர். அவள் அண்ணன் அகமதுவுக்கு மருத்துவ கல்லூரியின் கட்டணத்துக்காகவும் வீட்டின் மேலுள்ள கடன் தொகைக்காகவும் அவர்கள் வெளிநாடு சென்றுள்ளனர். அவர்கள் ஏழ்மையில் வாடவில்லை; எனினும் பணத்தின் தேவையால், அவர்கள் குடும்பம் நெல்லிக்காய் மூட்டையென சிதறி ,ஆளுக்கு ஒரு பக்கம் வாழும்படி ஆயிற்று. ஹமிதா பன்னாட்டுப் பள்ளியின் விடுதியில்; உயர் தர படிப்பு; நல்ல உணவு; நிறைய தோழிகள்; எல்லாம் இருந்தும்,உயிராய் இருக்கும் உறவுக்கு, ஏங்கியது; ஹமிதாவின் மனம். எல்லாருக்கும் எல்லாம் தரும் அல்லாஹ்வுக்கு தெரியாதா, ஹமிதாவின் தேவை, என்னவென்று?'

ஹமிதா! உன்னைப் பார்க்க அருப்புக்கோட்டையிலிருந்து உன் அத்தை சுந்தரியும், மாமா கார்த்திகேயனும் வந்திருக்கிறார்கள்.' ஒலிபெருக்கியின் குரல் அவளுக்கு அமுதென தோன்றியது. வேகமாக படியிறங்கி வந்தவளை, அன்புடன் அணைத்தாள்; அவர்களது அருப்புக்கோட்டை வீட்டில் குடியிருக்கும் வாப்பாவின் உடன்பிறவா தங்கை; சுந்தரி அத்தை.' ஹமிதா! பெருநாளுக்கு உன்னை வீட்டிற்கு கூட்டிப் போகத்தான் வந்திருக்கிறோம். உன் அண்ணன் அகமது,நாளை காலை ரயிலுக்கு வீட்டுக்கு வந்து விடுவான். என் அண்ணன்;அதான் உன் வாப்பா உன் பள்ளி தாளாளரிடமும், தலைமை ஆசிரியரிடமும் பேசி , உன்னை வீட்டிற்கு அழைத்துப் போக அனுமதி வாங்கி விட்டார். நீ ரம்ஜான் பெருநாளை எங்களுடன் கொண்டாடலாம். ஒரு நாள் லீவும் கொடுத்து உள்ளார்கள். உங்களுக்கான புது உடுப்புகள் வீட்டில் தயாராக உள்ளன. பள்ளிவாசல் தெருவில் இருக்கும் என் தோழி ஷஹிராபானுவும், காஜா முகைதீனும் இன்று இஃப்தார் விருந்துக்கும், நாளை ரமலான் விருந்துக்கும் நம்மை அழைத்துள்ளார்கள். அவர்களுடன் அகமது நாளை ஜமாஅத் தொழுகைக்கும் போவான். நீ ஷஹிராபானுவுடன் வீட்டில் நீ தராவீஹ் செய்யலாம். நான் வீட்டில் வேண்டிய இனிப்புகள் செய்கிறேன். எல்லோரும் ஒன்றாக அமர்ந்து ரமலான் விருந்து உண்ணலாம். இனிதே ரமலான் கொண்டாடியபின் மாமா உன்னை இங்கு பள்ளியின் விடுதியில் கொண்டு விடுவார்கள். ஹமிதாவின் மனத்தில் ஆனந்தம் பொங்க, கண்ணில் நீர் தளும்பியது; நெஞ்சம் நிறைந்த நன்றியால்.



சசிகலா விஸ்வநாதன்

# சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*6. கட்ட பொம்மனுக்கு எந்த இடத்தில் தூக்கு போட்டாங்க சொல்லுங்க.?*

*விடை: வேற எங்க கழுத்துல தான்.*

*7. டன் கணக்கில் துணி துவைக்கும் இடம் எது.?*

*விடை: WASHING (TON) தான்.*



# தினம் ஒரு சமையல்



## புடலங்காய் ரிங்க்ஸ்

**தேவையான பொருட்கள்:**

*2மீடியம் சைஸ் புடலங்காய்*
*தேவையான அளவுபஜ்ஜி மிக்ஸ்*
*1டீ ஸ்பூன்சமையல் சோடா*
*ருசிக்குஉப்பு*
*தேவையான அளவுதண்ணீர்*
*எண்ணெய் பொரிப்பதற்கு*

**செய்முறை:**



தேவையான பொருட்களை எடுத்து வைத்துக் கொள்ளவும். புடலங்காயை சுத்தம் செய்து வட்டமாக நறுக்கவும்.

பௌலில் பஜ்ஜி மிக்ஸ்ஸை போட்டு தேவையான தண்ணீர் விட்டு கட்டியில்லாமல் சற்று கெட்டியாக கரைத்துக் கொள்ளவும்.

மாவில் புடலங்காயை போட்டு மாவு நன்கு ஒட்டும்படி,பிசிறிக் கொள்ளவும்.

அடுப்பை ஹையில் வைத்து கடாயில் எண்ணெய் விட்டு நன்கு சூடாக்கவும்.

எண்ணெய் சூடானதும் அடுப்பை, மிதமான தீயில் வைத்து, புடலங்காயை போடவும்.

பிறகு இரண்டு பக்கமும் திருப்பி, நன்கு வேக வைத்து, மொறுமொறுப்பாக, எண்ணெய் வடிகூடையில் எடுக்கவும்.

இப்போது, சுவையான, சுலபமான,*புடலங்காய் ரிங்க்ஸ்*தயார். இது சாம்பார் சாதம், ரசம் சாதத்திற்கு சைட்டிஷ்ஷாகும். ஈவ்னிங் சிற்றுண்டிக்கு மிகவும் ஆப்ட்டாக இருக்கும். குளிருக்கு இதனை செய்து பார்த்து என்ஜாய் பண்ணவும்.

# வில்வம் பயன்கள்



வில்வம், சிவபெருமானுக்கு உகந்த, மருத்துவ குணங்கள் நிறைந்த ஒரு மூலிகை மரமாகும். இதன் இலை, பழம், வேர் அனைத்தும் நோய்களைப் போக்க உதவுகின்றன. முக்கியமாக சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்த, செரிமானத்தை மேம்படுத்த, வயிற்றுப் போக்கு மற்றும் குடல் புண்களைக் குணப்படுத்த, மற்றும் உடலுக்குக் குளிர்ச்சி தர வில்வம் பயன்படுகிறது.

வில்வத்தின் முக்கிய மருத்துவ பயன்கள்:

செரிமானம் மற்றும் குடல் ஆரோக்கியம்: வில்வப் பழம் குடலைப் பாதுகாத்து, ஜீரண சக்தியை அதிகரித்து, மலச்சிக்கல் மற்றும் வயிற்றுப் போக்கை சரிசெய்கிறது.

சர்க்கரை நோய் கட்டுப்பாடு: தினமும் காலையில் வெறும் வயிற்றில் 4-5 வில்வ இலைகளை மென்று சாப்பிடுவது சர்க்கரை அளவைக் குறைக்க உதவுகிறது.

காய்ச்சல் மற்றும் உடல் சூடு தணித்தல்: வில்வ ஓடு மற்றும் இலைகள் காய்ச்சலைக் குறைக்கவும், தாது எரிச்சல் (உடல் சூடு) தணிக்கவும் உதவுகின்றன.

மூச்சுப் பாதை நோய்கள்: வில்வ இலை சாறு, சளி மற்றும் மூச்சுக்குழாய் அழற்சி போன்ற சுவாசப் பிரச்சனைகளுக்கு நிவாரணம் அளிக்கிறது.

தோல் நோய் மற்றும் வீக்கம்: வில்வ இலைகளை அரைத்து வீக்கம் உள்ள இடங்களில் தடவினால் வலி குறையும்.


நூறு வருடங்களுக்கு மேல் வயதான வில்வ மரத்தின் கொழுந்தை தினமும் சாப்பிட்டு வந்தால் புற்று நோய் அடியோடு நிற்கும் என்று சித்தர்கள் கூறுகிறார்கள்.

வில்வ பழத்தின் சதையை 3 பங்கு நீர் விட்டு அரைத்து வடிகட்டி அத்துடன் புழுப்புச் சர்க்கரை அல்லது பனங்கற்கண்டு சேர்த்து ஒரு டம்ளர் வீதம் ஒரு நாளைக்கு 3 முறை வீதம் குடித்து வந்தால் மலத்தில் சீதம், ரத்தம் போவதை தடுத்து, மலம் ஒழுங்காக வெளியேற்றும். உடல் வெப்பமும் நீங்கும். குடல் திடமடையும்.

குறிப்பு: கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் குறைந்த ரத்த அழுத்தம் (LOW BP) உள்ளவர்கள் வில்வ இலைகளைப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பது நல்லது.

# சினிமா

# துரந்தர் 2 முழு படத்தை பார்த்த அல்லு அர்ஜுன்.. சொன்ன முதல் விமர்சனம்



துரந்தர் படம் மிகப்பெரிய ஹிட் ஆன நிலையில் அதன் இரண்டாம் பாகத்திற்காக தான் ரசிகர்கள் பெரிய எதிர்பார்ப்புடன் காத்திருந்தனர். துரந்தர் 2 படம் இன்று, மார்ச் 19ம் தேதி, உலகம் முழுக்க ரிலீஸ் ஆகி இருக்கிறது.

பிரிமியர் காட்சியில் துரந்தர் 2 படத்தை முழுமையாக பார்த்த நடிகர் அல்லு அர்ஜுன் படக்குழுவை பாராட்டி இருக்கிறார்.

மாதவன், ரன்வீர் ஆகியோர் மிக சிறப்பாக நடித்து இருக்கிறார்கள் என கூறி இருக்கும் அவர், படம் நாட்டுப்பற்றை நினைத்து பெருமை கொள்ளும் வகையில் இருக்கிறது என தெரிவித்து இருக்கிறார்.

JAI HIND" என அல்லு அர்ஜுன் பதிவிட்டுள்ளார்.



ஸ்ருதி ஹாசன் தற்போது உச்சகட்ட ஹாட் உடையில் போஸ் கொடுத்து இருக்கும் போட்டோஷூட் புகைபடங்களை வெளியிட்டு இருக்கிறார்.

அவை ரசிகர்களை கவர்ந்து இணையத்தில் வைரல் ஆகி வருகின்றன. சில மணி நேரங்களிலே இந்த போட்டோ களுக்கு 1.5 லட்சம் லைக்குகள் குவிந்து இருக்கிறது.

# வசூல் வேட்டை நடத்தும் ராதிகாவின் தாய் கிழவி படத்தின் ஓடிடி ரிலீஸ் எப்போது?... வெளிவந்த தகவல்



நடிகராக தன்னை அடையாளப்படுத்தி வரும் சிவகார்த்திகேயன் தயாரிப்பாளராகவும் களமிறங்கி சாதித்து வருகிறார்.

கடைசியாக அவர் தனது SK புரொடக்ஷன்ஸ் தயாரிப்பில் தாய் கிழவி என்ற படத்தை தயாரித்தார். அறிமுக இயக்குனர் சிவகுமார் முருகேசன் இயக்கத்தில் ராதிகா சரத்குமார் முக்கிய வேடத்தில் நடித்திருந்தார்.

மேலும் அவருடன் பால சரவணன், சிங்கம்புலி, அருள்தாஸ் உள்ளிட்ட பலரும் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்தனர். கடந்த பிப்ரவரி 27ம் தேதி வெளியான இப்படத்திற்கு நிவாஸ கே.பிரசன்னா இசையமைத்திருந்தார்.

படத்திற்கு மிகப்பெரிய பலம் என்றால் அது ராதிகா நடித்த பவுனுத்தாயி கதாபாத்திரம் தான்.

ஒரு சாதாரண பெண்ணின் வாழ்க்கையில் நடக்கும் போராட்டங்களையும், குடும்ப உணர்வுகளையும் மிக இயல்பாகவும், உணர்ச்சிகரமாகவும் வெளிப்படுத்தியிருக்கும் ஒரு படம். படம் வெளியாகி இதுவரை 75 கோடி வரை வசூல் வேட்டை நடத்தியுள்ளது.

இந்த நிலையில் தான் தாய் கிழவி படத்தின் ஓடிடி ரிலீஸ் குறித்த தகவல் வந்துள்ளது. இப்படத்தின் டிஜிட்டல் உரிமையை JIO HOTSTAR நிறுவனம் கைப்பற்றியுள்ளதாம். வரும் மார்ச் 26ம் தேதி இப்படம் ஓடிடியில் வெளியாகும் என கூறப்படுகிறது.

# சியமந்தக நகை கதை

இந்த கதை விஷ்ணு புராணத்தில் வருகிறது சூரிய பகவானுக்கு உரிய நகை அதை அவர் கழுத்தில் அணிந்து இருந்தார்

இது எங்கு இருக்கிறதோ அந்த நாட்டு மன்னன் இதனை அணிந்தால் அந்த நாடு செழிப்புற்று இருக்குமாம்

மேலும் தினமும் தோராயமாக 170 பவுண்டு தங்கத்தை உற்பத்தி செய்யுமாம்

யாதவ பிரபு சத்ராஜித் சூரிய கடவுளின் பக்தர் ஒருநாள் அவர் முன் தோன்றிய சூரியனின் தேஜஸ்ஸில் மயங்கிய சத்ராஜித் சூரியனைத் தெளிவாக காணும் வகையில் வர வேண்டுமென வேண்ட சூரியன் தன் கழுத்தில் அணிந்திருந்த சியமந்தக மணியைக் கழற்றி எடுத்தார்

சூரிய வழிபாட்டை முடித்துக்கொண்ட சத்ராஜித் சூரிய பகவானிடம் அந்த மணியை கேட்க அவரும் உவந்து கொடுத்தார்

தன் கழுத்தில் அணிந்து கொண்டு துவாரகை நோக்கி நடந்தார் சத்ராஜித் சூரியன் போலவே திகழ துவாரகை மக்கள் அவரைச்



சூரியக்கடவுள் எனத் தவறாக புரிந்து கொண்டனர்

சத்ராஜித் துவாரகை ஆட்சிக்கு உட்பட்ட குறுநில மன்னன் என்பதால் கிருஷ்ணனும் அவரிடம் இதனை யாதவர்களின் தலைவனான உக்கிரசேனரிடம் காணிக்கையாக கொடுங்கள் என்றார்

அதற்குச் சத்ராஜித் இணங்கவில்லை அங்கிருந்து சென்ற சத்ராஜித் அதனைத் தன் சகோதரர் பிரசேனனிடம் வழங்கினார்

பிரசேனன் அதனை அணிந்து கொண்டபின் கர்வம் கொண்டான் ஒருமுறை காட்டில் வேட்டையாடும் போது சிங்கத்தால் தாக்கப்பட்டு உயிரிழந்தார் அங்கு

சிங்கத்திடமிருந்து ஜாம்பவான் என்ற கரடி (இவர்தான் அனுமனுக்கு தன் பலத்தை சுட்டிக்காட்டி இலங்கை செல்ல தகுதியானவன் அனுமன் என்று சொன்ன சிரஞ்சீவி) அந்த நகையை கைப்பற்றியது

பிரசேனன் வெகு நாள் ஆகியும் வராமல் போகவே அவன் காணாமல் போனதற்குக் கிருஷ்ணன் தான் காரணம் என்று நினைத்தான் சத்ராஜித்

கிருஷ்ணன் அந்த சியமந்தக மணிக்கு ஆசைப்பட்டு கொலை செய்துவிட்டு மணியைத் திருடிச் சென்றிருப்பாரோ என்ற சந்தேகம் பகிரப்பட்டது

தான் குற்றமற்றவன் என்பதை நிரூபிக்க வேண்டிய சூழல் ஏற்பட்டதால் கிருஷ்ணன் உண்மை குற்றவாளியைக் கண்டுபிடித்து நகையுடன் வருவதாகச் சொல்லி கிளம்பினார்

இறந்த பிரசேனனின் விட்டுச்சென்ற எச்சங்கள் அடையாளங்கள் சிங்கத்தின் பற்கள் நகங்கள் குதிரையின் சடலங்கள் இவற்றைக் கொண்டு தொடரலானார் கிருஷ்ணர்

இறந்தது ஒரு சிங்கத்தால் என்ற கண்ட கிருஷ்ணர் பின்னும் தொடர்ந்தார் அது ஒரு கரடியின் காலடித் தடங்களாக இருந்தது பின் அது அவரை இறுதியில் ஜாம்பவானின் குகைக்கு அழைத்துச் சென்றது

ஜாம்பவானுடன் இருபத்தி எட்டு நாட்கள் ஆவேசமாக போரிட்டபின் கடைசியாக ஜாம்பவான் சோர்வுற்று பின் கிருஷ்ணனும் ராமனும் வேறு இல்லை என்பதை உணர்ந்து நகையைக் கொடுத்தார்

ஜாம்பவானின் மகள் ஜாம்பவதி யையும் மணந்து துவாரகை நோக்கி திரும்பினார் கிருஷ்ணர்

சத்ராஜித்தை அழைத்து நடந்த உண்மைகளைக் கூறி அந்த நகையையும் திருப்பிக் கொடுத்தார் கிருஷ்ணன்

பெற்றுக்கொண்ட சத்ராஜித் மிகவும் அவமானத்துடனும் வருத்தத்துடனும் வீடு திரும்பினார்

தான் கிருஷ்ணரைக் குற்றம் சுமத்தியது தவறு என்று எண்ணிய சத்ராஜித் தனது மகளான எல்லா தெய்வீக குணங்களும் பெற்ற சத்தியபாமாவைத் திருமணம் செய்து கொடுத்தார் சியமந்தக நகையையும் கொடுத்தார்

சத்தியபாமாவை ஏற்றுக்கொண்ட கிருஷ்ணர் சியமந்தகநகையைச் சத்ராஜித்திடமே கொடுத்தார்...

BHANUMATI NACHIYAR

# தினம் ஒரு தலைவர்கள்: ஏக்நாத் ராமகிருஷ்ணா ரானடே வரலாறு

பிரிட்டிஷ் இந்திய மாநிலமான மகாராஷ்டிராவில் அமராவதி மாவட்டத்தில் உள்ள திம்தலாவில் ரானடே நவம்பர் 19, 1914 அன்று பிறந்தார் . 1920 ஆம் ஆண்டில், அவரது குடும்பம் நாக்பூருக்கு குடிபெயர்ந்தது , அங்கு அவர் தனது ஆரம்பக் கல்விக்காக பிரதானவிஸ்புரா பள்ளியில் பயின்றார். 1932 ஆம் ஆண்டு, நாக்பூரில் உள்ள நியூ இங்கிலீஷ் உயர்நிலைப் பள்ளியில் மெட்ரிகுலேஷன் தேர்வில் தேர்ச்சி பெற்றார். தத்துவத்தில் கௌரவ முதுகலைப் பட்டம் பெற்ற பிறகு , 1945 ஆம் ஆண்டு ஜபல்பூரில் உள்ள சாகர் பல்கலைக்கழகத்தில் எல்.எல்.பி. பட்டம் பெற்றார்.

ராஷ்டிரிய ஸ்வயம்சேவக் சங்கத்தில் பங்கு

ரானடே , ஒரு இந்து தேசியவாத தன்னார்வ அமைப்பான ராஷ்ட்ரிய சுயம்சேவக் சங்கத்தின் ஆர்வலர், சித்தாந்தவாதி மற்றும் தலைவராக பணியாற்றினார்.

1925 ஆம் ஆண்டு ஆர்.எஸ்.எஸ். அமைப்பை நிறுவிய கே.பி. ஹெட்கேவரால் அவர் பள்ளிப் பருவத்தில் ஈர்க்கப்பட்டார் . ரானடே 1926 ஆம் ஆண்டு சுயம்சேவக் (தன்னார்வலராக) சேர்ந்தார். நாக்பூரில் ஆர்.எஸ்.எஸ்.-இல் பணியாற்றிய பிறகு, ரானடே 1938 ஆம் ஆண்டு மத்தியப் பிரதேசத்தின் மகாகோஷலுக்கு பிராந்த் பிரச்சாரக் ( மாகாண அமைப்பாளர்) ஆகச் சென்றார்.

மகாத்மா காந்தி படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து , ஆர்.எஸ்.எஸ் தடை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, ரானடே நிறுவன முயற்சிகளை வழிநடத்த தலைமறைவாகச் சென்றார், இதனால் அவர் "சர்சங்கசாலக்" என்ற புனைப்பெயரைப் பெற்றார். அதே நேரத்தில் , தடையை நீக்குவதற்காக எம்.எஸ். கோல்வால்கர் தலைமையில் ஆர்.எஸ்.எஸ் ஒரு சத்தியாக்கிரகத்தைத் தொடங்கியது. கோல்வால்கர் கைது செய்யப்பட்ட பிறகு, ரானடே சத்தியாக்கிரகத்திற்கு தலைமை தாங்கினார் மற்றும் நாட்டின் உள்துறை அமைச்சர் சர்தார் படேலுடன் ரகசிய பேச்சுவார்த்தைகளில் பங்கேற்றார் . ஆர்.எஸ்.எஸ் தடையை ரத்து செய்வதற்கான நிபந்தனையாக, ஆர். எஸ்.எஸ் எழுதப்பட்ட அரசியலமைப்புடன் ஒழுங்கமைக்கப்பட வேண்டும் என்று படேல் வலியுறுத்தினார் .

ரானடே, சக ஆர்.எஸ். எஸ் உறுப்பினர்களான பிரபாகர் பல்வந்த் தானி மற்றும் மதுகர் தத்தாத்ரயா தியோரஸ் ஆகியோருடன் இணைந்து ஒரு அரசியலமைப்பை உருவாக்கினார் , ஆனால் அது அரசாங்கத்தின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யவில்லை. இதன் விளைவாக, இந்திய அரசியலமைப்பு மற்றும் கொடிக்கு விசுவாசமாக இருத்தல், வன்முறையைத் தவிர்ப்பது, பெற்றோரின் அனுமதியுடன் சிறார்களை மட்டுமே இயக்கத்தில் சேர்ப்பது, சர்சங்கசாலக் தேர்தலுக்கான நடைமுறைகளை அமைத்தல் போன்ற பிரிவுகளைச் சேர்க்க மறுவடிவமைப்பு செய்யப்பட்டது . ஜூன் 1949 இல் அரசாங்கம் மறுவடிவமைப்பு செய்யப்பட்ட அரசியலமைப்பை ஏற்றுக்கொண்டது. ஆர்.எஸ். எஸ் மீது விதிக்கப்பட்ட தடை ஜூலை 11, 1949 அன்று ரத்து செய்யப்பட்டது.

1950 ஆம் ஆண்டில், வங்காளம் , ஒடிசா மற்றும் அசாம் ஆகியவற்றை உள்ளடக்கிய பூர்வாஞ்சல் க்ஷேத்திரத்திற்கான க்ஷேத்திர பிரச்சாரகராக அவர் பணியாற்றினார் . கல்கத்தாவில் , இந்தியப் பிரிவினையைத் தொடர்ந்து பாகிஸ்தானிலிருந்து வந்த அகதிகளுக்கு உதவுவதற்காக வாஸ்துஹாரா சஹாயத சமிதியை (வஸ்துஹாரா சஹாயத சமிதியை) நிறுவினார் . 1953 ஆம் ஆண்டில், ரானடே அகில பாரதிய பிரச்சார பிரமுக் (வஸ்துஹாரா பிரச்சார பிரமுக்) ஆனார். 1956 முதல் 1962 வரை,



ரானடே ஆர்எஸ்எஸ்ஸின் பொதுச் செயலாளராகப் பணியாற்றினார் . இந்தக் காலகட்டத்தில், இணைந்த அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து அதிக செயல்பாட்டாளர் நிலைப்பாட்டைப் பின்பற்றுவதற்குப் பதிலாக, குணநலன்களை உருவாக்குவதில் ஆர்எஸ்எஸ்ஸை மீண்டும் கவனம் செலுத்த முயன்றார். 1962 ஆம் ஆண்டில், அவர் ஆர்எஸ்எஸ்ஸின் அகில இந்திய பௌதிக் பிரமுக் ஆகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

196372 காலகட்டத்தில், விவேகானந்தர் பாறை நினைவுச்சின்னத்தை நிர்மாணிப்பதில் ரானடே ஒரு கருவியாகப் பங்களித்ததாகக் கருதப்படுகிறது .

1972 ஆம் ஆண்டில், கன்னியாகுமரியை மையமாகக் கொண்ட விவேகானந்த கேந்திரத்தை ரானடே நிறுவினார் , இது " துறத்தல் மற்றும் சேவை " கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு இந்து ஆன்மீக அமைப்பாகும் .

இந்த கேந்திரா ஒரு குரு அல்லது " குரு கலாச்சாரத்தின் " பிரச்சாரம் இல்லாத ஒரு "சாதாரண சேவை அமைப்பு" ஆகும் , இருப்பினும் இது விவேகானந்தரின் போதனைகளால் பாதிக்கப்பட்டது . இது இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் 206 கிளைகளைக் கொண்டுள்ளது. அவர் கேந்திராவிற்கு " அவதார-ஹூட் " (கடவுள் அவதாரம்) என்ற நிலையை அங்கீகரிக்கவில்லை. அவர் தன்னையோ அல்லது விவேகானந்தரையோ மையத்தில் வழிபாட்டு நிலைக்கு உயர்த்திக் கொள்ளவில்லை, ஆனால் ஓம்காரத்தை அதன் வழிகாட்டும் கொள்கையாகப் பயன்படுத்துவதை ஊக்குவித்தார். ஓம்காரத்தை குருவாக ஏற்றுக்கொள்வதன் மூலம், இந்தியாவில் உள்ள அனைத்து குருக்களும் கௌரவிக்கப்படுவார்கள் என்று அவர் நம்பினார். விவேகானந்தா கேந்திராவின் பொதுச் செயலாளராகப் பணியாற்றிய பிறகு, ரானடே 1978 இல் அதன் தலைவரானார்.

விவேகானந்தர் நினைவு மையம் மற்றும் மையம்

மேலும் காண்க: விவேகானந்தா ராக் மெமோரியல் ஏக்நாத் ரானடேவின் பங்கு

ரானடே விவேகானந்தர் ராக் நினைவுக் குழுவின் அமைப்புச் செயலாளராக இருந்தார் . விவேகானந்தரின் போதனைகள் ரானடேவை ஆழமாக பாதித்தன. 1963 ஆம் ஆண்டு, அவரது பிறந்த நூற்றாண்டு விழாவில், விவேகானந்தரின் எழுத்துக்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றை " இந்து தேசத்திற்கான எழுச்சி அழைப்பு" என்ற தலைப்பில் தனிப்பட்ட அஞ்சலியாக வெளியிட்டார். அதே ஆண்டு, கன்னியாகுமரிக்கு அருகிலுள்ள நடுக்கடல் பாறை இடத்தில் விவேகானந்தரின் நினைவாக ஒரு நினைவுச்சின்னத்தை கட்டும் யோசனையை ரானடே உருவாக்கினார் , அங்கு விவேகானந்தர் 1892 டிசம்பரில் மூன்று நாட்கள் தியானம் செய்தார்.

ஆர்.எஸ்.எஸ் தலைவர் எம். எஸ். கோல்வால்கர் மற்றும் பிறரிடமிருந்து இந்தத் திட்டத்திற்கு நேர்மறையான பதில்களைப் பெற்ற பிறகு , ரானடே விவேகானந்தர் பாறை நினைவு ஏற்பாட்டுக் குழுவை நிறுவி அதன் அமைப்புச் செயலாளரானார் . ஆதரவை உருவாக்கவும் பின்னர் நினைவுச்சின்னத்திற்கான நிதி திரட்டவும் நாடு முழுவதும் பல்வேறு குழு கிளைகள் நிறுவப்பட்டன ( பாரதிய ஜனதா கட்சித் தலைவர் எல்.கே. அத்வானி டெல்லி கிளையின் அமைப்புச் செயலாளராகப் பணியாற்றினார் ).

இந்த யோசனையை முதலில் கல்வி மற்றும் கலாச்சார அமைச்சராக இருந்த ஹுமாயூன் கபீர் நிராகரித்த பிறகு , ரானடே இந்திய நாடாளுமன்றத்தின் 300க்கும் மேற்பட்ட உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்றார் . இதன் மூலம் இந்த திட்டம் அப்போதைய பிரதமர் இந்திரா காந்தியிடமிருந்து ஒப்புதல் பெற வழிவகுத்தது . பாரம்பரியமாக ஆர்எஸ்எஸ்-க்கு எதிரான பிரிவுகள் உட்பட அரசியல் மற்றும் ஆன்மீக சமூகத்தின் சில பகுதிகளிடமிருந்தும் ரானடே இந்த திட்டத்திற்கான ஒப்புதலைப் பெற முடிந்தது.

இந்த திட்டம் அங்கீகரிக்கப்பட்ட பிறகு, நாடு முழுவதும் உள்ள நன்கொடையாளர்களிடமிருந்து விவேகானந்தர் பாறை நினைவுச்சின்னத்தை நிர்மாணிப்பதற்கான நிதி திரட்ட தன்னார்வலர்களை ரானடே வழிநடத்தினார். மேலும் , ஜன்-பாகிதாரி (மக்கள் பங்கேற்பு) திட்டமாக ஒவ்வொரு குடிமகனும் குறைந்தது 1 ரூபாயை நன்கொடையாக வழங்க ஊக்குவித்தார்.

இறப்பு மற்றும் மரபு

ரானடே 1982 ஆகஸ்ட் 22 அன்று மாரடைப்பால் சென்னையில் இறந்தார் . மறுநாள் கன்னியாகுமரியின் விவேகானந்தபுரத்தில் அவரது உடல் தகனம் செய்யப்பட்டது . அவரது மரணத்திற்குப் பிறகு, ஆர்எஸ்எஸ் வெளியீடான ஆர்கனைசரால் அவர் கர்மயோகி ( கர்மயோகத்தின் பின்பற்றுபவர்/ மாஸ்டர்) என்று கௌரவிக்கப்பட்டார்.

அதே ஆண்டில், ரானடேவின் வாழ்க்கையைப் பற்றி விவேகானந்த கேந்திராவால் "ஏக்நாத்ஜி: ஒரு வாழ்க்கை - ஒரு பணி" என்ற ஆவணப்படம் தயாரிக்கப்பட்டது.

## அசாம் சட்டசபை தேர்தல்; ஏப்ரல் 1,3 மற்றும் 6 ஆகிய 3 நாட்கள் பிரதமர் மோடி பிரசாரம்

**புதுடெல்லி, மார்ச் 20:**

அசாமில் முதல்-மந்திரி ஹிமந்த பிஸ்வா சர்மா தலைமையில் பா.ஜ.க. ஆட்சி நடந்து வருகிறது. மே 20-ந்தேதியுடன் அசாம் மாநில பதவி காலம் முடிவடையும். இந்நிலையில், 126 தொகுதிகளை கொண்ட அசாம் மாநிலத்திற்கு, ஏப்ரல் 9-ந்தேதி ஒரே கட்டத்தில் தேர்தல் நடத்தி முடிக்கப்படும் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இதற்கான வாக்கு எண்ணிக்கை மே 4-ந்தேதி நடைபெற உள்ளது. இதனை முன்னிட்டு, கட்சிகள் தொகுதி பங்கீடு, வேட்பாளர் தேர்வு உள்ளிட்ட தீவிர அரசியல் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக, ஏப்ரல் 1,3 மற்றும் 6 ஆகிய நாட்களில் அசாமில் தேர்தல் கூட்டங்களில் கலந்து கொண்டு மக்களிடம் உரையாற்றுவது என பிரதமர் மோடி திட்டமிட்டுள்ளார்.

அசாமில் 3-வது முறையாக வெற்றி பெற்று ஆட்சியை தக்க வைக்கும் முனைப்பில் பா.ஜ.க. தேர்தல் பணியாற்றி வருகிறது. எனினும், பா.ஜ.க.வை வீழ்த்தி இந்த தேர்தலில் வெற்றி பெற காங்கிரஸ் கட்சியும் திட்டம் தீட்டி வருகிறது. இந்நிலையில், அசாமின் நகாவன் தொகுதியில் 2 முறை காங்கிரஸ் எம்.பி.யாக பதவி வகித்த பிரத்யுத் போர்டோலாய் தனது பதவியை நேற்று ராஜினாமா செய்து விட்டு, அசாம் முதல்-மந்திரி ஹிமந்தா பிஸ்வா சர்மா மற்றும் மாநில பா.ஜ.க. தலைவர் திலீப் சாய்கியா ஆகியோர் முன்னிலையில் பா.ஜ.க.வில் இணைந்துள்ளார். இது காங்கிரசில் பின்னடைவாக பார்க்கப்படுகிறது.

## ரூ.4 கோடியை தாண்டிய மருத்துவ கட்டணம் – கோமாவில் மகனை மீட்க 27 மாதமாக போராடும் பெற்றோர்!– கை விரித்த காப்பீடு நிறுவனம்



**மும்பை, மார்ச் 20:**

வாழ்க்கைக்கும் மரணத்துக்கும் இடையிலான நூலிழையில் ஊசலாடும் கோமா நோயாளிகளின் நிலை குறித்து ஹரிஷ் ரானா வழக்கு நாடு தழுவிய அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

தற்போது அதே போன்றதொரு உருக்கமான சூழலில், மும்பையைச் சேர்ந்த ஆனந்த் தீக்சித் (35) என்ற இளைஞர், கடந்த இரண்டரை ஆண்டுகளுக்கும் மேலாக 'கோமா' எனப்படும் சுயநினைவற்ற நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார். கடந்த 2013ல் மாடியில் இருந்து விழுந்து மூளை பாதிப்படைந்து, நீண்ட போராட்டத்துக்குப் பிறகு உச்ச நீதிமன்ற அனுமதியுடன் கருணைக் கொலை செய்யப்பட்ட ஹரிஷ் ரானாவின் நிழலாக தற்போது ஆனந்தின் வாழ்க்கையும் மாறியுள்ளது.

உயிருள்ள சடலமாக முடங்கிக் கிடக்கும் ஆனந்தின் துயரம் 2023ம் ஆண்டு டிசம்பர் 29ம் தேதி தொடங்கியது. கோரக்பூரில் தான் புதிதாக வாங்கிய ஸ்கூட்டரில் சென்ற போது ஏற்பட்ட விபத்து, அவரது வாழ்க்கையை புரட்டிப் போட்டது. அன்று முதல் உயிர்காக்கும் உபகரணங்களின் உதவியுடனும், குழாய் வழியாகச் செலுத்தப்படும் உணவுடனும் அவர் காலம் தள்ளி வருகிறார். கடந்த 27 மாதங்களாக ஆனந்தின் ஒரு சிறு அசைவுக்காக அவரது பெற்றோர், உறவினர்கள் காத்திருக்கின்றனர். இதுவரை மருத்துவக் கட்டணமாக மட்டும் ரூ. 4 கோடியை அவர்கள் செலவிட்டுள்ளனர். இந்தத் துயரத்துக்கு மத்தியிலும், மும்பை மாநகராட்சி அவர்கள் குடியிருந்த வீட்டை இடித்துத் தரைமட்டமாக்கியுள்ளது. கட்டிடத்தின் சட்டப்பூர்வ சிக்கல்கள் காரணமாக மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையால், ஐசியூ-வில் மகனுக்காகப் போராடிக் கொண்டிருந்த பெற்றோர் தற்போது வாடகை வீட்டுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

காப்பீடு மற்றும் மருத்துவச் சட்டங்களில் மாற்றம் ஏற்படாத வரை இதுபோன்ற கோமா நோயாளிகளின் நிலை அந்த முழுக் குடும்பத்துக்குமான மரண தண்டனை என்பதற்கு ஆனந்தின் நிலையே தற்போது சாட்சியாக மாறி நிற்கிறது.

கைவிரித்த காப்பீட்டு நிறுவனம்: இது குறித்து ஆனந்தின் தந்தை கண்ணீருடன் கூறியதாவது: என் மகன் மீண்டும் ஒருமுறை 'அப்பா' என்று கூப்பிட மாட்டானா என்ற ஏக்கத்தில் என்னிடம் இருந்த அனைத்தையும் விற்றுவிட்டேன். மருத்துவமனை கட்டணங்கள் ஒருபுறம் எங்களைச் சூறையாட, மறுபுறம் 'கேர் ஹெல்த் இன்சூரன்ஸ்' நிறுவனம் எங்களது கோரிக்கையை நிராகரித்து எங்களைக் கடனாளியாக்கி விட்டது. நாங்கள் ஐசியூ-வில் மகனின் உயிருக்காகப் போராடிய போது, மாநகராட்சி கொஞ்சமும் மனசாட்சி இன்றி எங்களது வீட்டையும் இடித்துவிட்டது.

## 5 மாநில தேர்தல் பணியில் 25 லட்சம் அதிகாரிகள்; இந்திய தேர்தல் ஆணையம் அறிவிப்பு

**புதுடெல்லி, மார்ச் 20:**

நாட்டில் தமிழகம், கேரளா, புதுச்சேரி, அசாம் மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய 5 மாநிலங்களுக்கான சட்டசபை தேர்தல் நடப்பு ஆண்டில் நடைபெற உள்ளது. இந்த நிலையில், தேர்தலுக்கான தேதி, வாக்கு எண்ணிக்கை உள்ளிட்ட விவரங்களை தேர்தல் ஆணையம் கடந்த 15-ந்தேதி அறிவித்தது.

இதில், மே மாதம் 10-ந் தேதியுடன் தமிழக அரசின் பதவிக்காலம் நிறைவடைகிறது. இதேபோன்று, ஜூன் 15-ந்தேதி புதுச்சேரி, மே 7-ந்தேதி மேற்கு வங்காளம் மே 20-ந்தேதி அசாம், மே 23-ந்தேதி கேரள சட்டசபைக்கான பதவிக்காலம் முடிவடைகிறது. மேற்கு வங்காளம் தவிர பிற 4 மாநிலங்களுக்கும் ஒரே கட்டத்தில் தேர்தல் நடத்தப்படும். இதேபோன்று, அனைத்து 5 மாநிலங்களுக்கான வாக்கு எண்ணிக்கை ஒரே நாளில் (மே 4-ந்தேதி) நடைபெற உள்ளது. 5 மாநிலங்களில் நடைபெற உள்ள தேர்தலில் மொத்தம் 17.4 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றவர்களாக உள்ளனர். வன்முறை, கலவரம் இன்றி சுமுகத்துடன் தேர்தல் நடைபெறுவதற்காக, 70 வாக்காளர்களுக்கு ஒருவர் என்ற அடிப்படையில் தேர்தல் அதிகாரி பணியமர்த்தப்படுவார்.

வாக்காளர்கள் அச்சமின்றி தங்கள் கடமையை நிறைவேற்ற, முற்றிலும் பாரபட்சமின்றி செயல்படும்படி தேர்தல் அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டு உள்ளது என தலைமை தேர்தல் ஆணையாளர் ஞானேஷ் குமார் குறிப்பிட்டு உள்ளார். 5 மாநில தேர்தல் பணியில் ஒட்டுமொத்தத்தில் 25 லட்சம் அதிகாரிகள் ஈடுபட உள்ளனர். அவர்களில் 15 லட்சம் பேர் தேர்தல் அதிகாரிகள் ஆவர். 8.5 லட்சம் பாதுகாப்பு படையினரும், 40 ஆயிரம் வாக்கு எண்ணிக்கை அதிகாரிகளும் பணியாற்றுவார்கள். 49 ஆயிரம் பேர் தேர்தல் கண்காணிப்பாளராகவும், 21 ஆயிரம் பேர் தேர்தல் பிரிவு அதிகாரிகளாகவும் , 15 ஆயிரம் பேர் வாக்கு எண்ணிக்கை கண்காணிப்பாளராகவும் மற்றும் பிற அதிகாரிகளும் பணியில் ஈடுபடுவார்கள்.

## பான் கார்டுக்கு விண்ணப்பிக்க இனி ஆதார் மட்டும் போதாது - மத்திய அரசு அதிரடி




**புதுடெல்லி, மார்ச் 20:**

பான் கார்டு வருமான வரித்துறையால் வழங்கப்படும் முக்கிய அடையாள ஆவணமாகும். நிதி பரிவர்த்தனைகள், வருமான வரி செலுத்துதல் உள்ளிட்டவற்றுக்கு பான் கார்டு கட்டாயமாகும். 10 இலக்கங்கள் கொண்ட இந்த பான் கார்டை வருமான வரித்துறையின் கீழ் செயல்படும் இணையதளத்தில் விண்ணப்பித்து பெற முடியும். தற்போது வரை ஆதார் கார்டு மட்டும் இருந்தால் போதும். அதை வைத்து உடனடியாக பான் எண் பெற்றுக்கொள்ள முடியும். ஆனால், இந்த விதிகளில் வரும் 1ஆம் தேதி முதல் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இனி பான் கார்டு விண்ணப்பத்தின் போது பிறந்த தேதியை உறுதி செய்ய ஆவணமும் சமர்ப்பிக்க வேண்டும்.

இது தொடர்பாக மத்திய அரசின் பொது சேவை அமைப்பு கூறியிருப்பதாவது: "பான் கார்டுக்கு விண்ணப்பிக்கும் நடைமுறை மேம்படுத்தப்பட்டுள்ளது. புதிய நடைமுறையின்படி ஆதார் அட்டையுடன் பிறந்த தேதியை உறுதிப்படுத்தும் ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டியது அவசியம். மார்ச் 31ம் தேதிக்குள் விண்ணப்பிக்கும் நபர்களுக்கு ஆதார் மட்டுமே போதுமானது" என தெரிவிக்கப்பட்டுள்ளது. பிறப்பு சான்றிதழ், வாக்காளர் அடையாள அட்டை, பாஸ்போர்ட், ஓட்டுநர் உரிமம், பத்தாம் வகுப்பு கல்வி சான்றிதழ் உள்ளிட்ட ஏதேனும் ஒன்றை பிறந்த தேதிக்கான ஆவணமாக சமர்ப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய கல்விக் கொள்கையின்படி அறிமுகம்: சி.பி.எஸ்.இ. 10–ம் வகுப்பு 2–வது பொதுத் தேர்வுக்கு விண்ணப்பம் தொடக்கம்



**புதுடெல்லி, மார்ச் 20:**

மத்திய அரசு புதிய கல்விக் கொள்கையை அறிமுகப்படுத்தி உள்ளது. அதன்படி, இந்த ஆண்டு முதல், மத்திய இடைநிலைக் கல்வி வாரியமான சி.பி.எஸ்.இ. பாடத்திட்டத்தில், 10-ம் வகுப்பு மாணவர்களுக்கு, 2 முறை வாரியத் தேர்வுகளை எழுத வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில், இந்த ஆண்டு 2-வது பொதுத் தேர்வுகள் வரும் மே மாதம் நடைபெற உள்ளது. இதில், அதிகபட்சமாக 3 பாடங்களுக்கு தேர்வு எழுதி, தங்களின் மதிப்பெண்களை உயர்த்திக் கொள்ளலாம்.

அதற்கு, வரும் 31-ந் தேதி வரை கட்டணம் செலுத்தி, முதல் கட்டமாக விண்ணப்பிக்கலாம். அல்லது 10-ம் வகுப்பு தேர்வு முடிவுகள் வெளியானதில் இருந்து, 5 நாட்களுக்குள் 2-ம் கட்டமாக விண்ணப்பிக்கலாம். அடுத்த 2 நாட்களுக்கு தாமதக் கட்டணம் செலுத்தி, 3-ம் கட்டமாகவும் விண்ணப்பிக்கலாம். அதே சமயம், முதல் கட்ட பொதுத் தேர்வில் பங்கேற்காத மாணவர்கள், 2-ம் கட்ட பொதுத் தேர்வில் பங்கேற்க அனுமதிக்கமாட்டார்கள் என்று சி.பி.எஸ்.இ. தெரிவித்துள்ளது. பாலாஜியின் அறக்கட்டளை குறித்த அடையாளங்கள் எவ்வாறு இடம்பெற்றது? கரூர் கூட்ட நெரிசல் நடந்ததும் உடனடியாக மருத்துவமனைக்கு சென்றது எப்படி? உள்பட பல்வேறு கேள்விகளை செந்தில் பாலாஜியிடம் சிபிஐ அதிகாரிகள் எழுப்பினர். இந்த கேள்விகளுக்கு செந்தில் பாலாஜி பதில் அளித்தார். இதையடுத்து 6 மணிநேரமாக நடந்த சிபிஐ விசாரணை தற்போது நிறைவடைந்துள்ளது.

இந்த வழக்கில் செந்தில் பாலாஜியை மீண்டும் விசாரணைக்கு அழைக்க சிபிஐ அதிகாரிகள் திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.


## 3,142 டெலிகிராம் சேனல்கள், 800 வலைதளங்கள் முடக்கம் - மத்திய அரசு

**புதுடெல்லி, மார்ச் 20:**

திருடப்பட்ட பொருளடக்கங்களை வெளியிட்ட 3,142 டெலிகிராம் சேனல்கள், 800 வலைதளங்கள் முடக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக மக்களவையில் எழுப்பப்பட்ட கேள்விக்கு மத்திய செய்தி மற்றும் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் எல்.முருகன் புதன்கிழமை அளித்த பதில்: திரைப்படங்கள் திருட்டுத்தனமாகப் படம் பிடிக்கப்படுவதைத் தடுப்பதற்கான சட்ட வழிமுறைகள், ஒளிப்பதிவு திருத்தச் சட்டம் 2023-இன் 6ஏஏ, 6ஏபி ஆகிய பிரிவுகளின் கீழ் வலுப்படுத்தப்பட்டுள்ளன. அந்தப் பிரிவுகள் திரைப்படங்களை அனுமதியின்றி படம் பிடித்து பகிரப்படுவதைத் தடை செய்கிறது. இந்தப் பிரிவுகளை யாராவது மீறினால், அவருக்கு அந்தச் சட்டத்தின் 7(1ஏ) பிரிவின் கீழ், குறைந்தபட்சம் 3 மாதங்கள் சிறைத் தண்டனையுடன் ரூ.3 லட்சம் அபராதமும் விதிக்கக்கப்படும். இந்தச் சிறைத் தண்டனையை 3 ஆண்டுகள் வரை நீட்டித்து, திரைப்பட தயாரிப்பின் மொத்த செலவில் 5 சதவீதத்தை அபராதமாக விதிக்க முடியும். இந்நிலையில், ஓடிடி தளங்கள், தயாரிப்பாளர்கள் உள்ளிட்டோருக்குச் சொந்தமான அல்லது உரிமம் பெற்ற பொருளடக்கங்களை, அவர்களின் அனுமதியின்றி பதிப்புரிமை சட்டம் 1957-ஐ மீறி வெளியிட்ட 3,142 சேனல்களை முடக்குமாறு தகவல் தொழில்நுட்பச் சட்டப் பிரிவு 79(3)(பி)-இன் கீழ் டெலிகிராம் நிறுவனத்துக்கு கடந்த மார்ச் 11-ஆம் தேதி தெரியப்படுத்தப்பட்டது. இதே காரணத்துக்காக சுமார் 800 வலைதளங்கள் இணையதள சேவை நிறுவனங்கள் மூலம் முடக்கப்பட்டன. தனியார் தொலைக்காட்சி சேனல்களில் ஒளிபரப்பப்படும் அனைத்து விளம்பரங்களும் கேபிள் தொலைக்காட்சி நெட்வர்க் ஒழுங்காற்றுச் சட்டம் 1995-இன் கீழ் தெரிவிக்கப்பட்டுள்ள விளம்பர விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். நிகழ்ச்சி விதிமுறை மற்றும் விளம்பர விதிமுறை மீறப்பட்டதாக எழும் புகார்களை விசாரிக்க, துறைகளுக்கு இடையிலான குழுவை மத்திய அரசு அமைத்துள்ளது என்று தெரிவித்தார்.

## திருப்பதி கோவிலில் ஒருநாள் உண்டியல் காணிக்கை ரூ.4.88 கோடி



**திருமலை, மார்ச் 20:**

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் தினமும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தந்து சாமி தரிசனம் செய்து வருகின்றனர். விடுமுறை மற்றும் விஷேச தினங்களில் இலவச தரிசனத்துக்கு வரும் பக்தர்கள் 20 மணி நேரத்துக்கு மேலாக காத்திருந்து சாமி தரிசனம் செய்கின்றனர்.

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் நேற்று முன்தினம் 70 ஆயிரத்து 2 பக்தர்கள் சாமி தரிசனம் செய்துள்ளனர். 21 ஆயிரத்து 738 பேர் தலைமுடி காணிக்கை செலுத்தி இருக்கிறார்கள். அன்று ஒருநாள் உண்டியல் காணிக்கையாக ரூ.4 கோடியே 88 லட்சம் கிடைத்திருப்பதாக தேவஸ்தான அதிகா ரிகள் தெரிவித்துள்ளனர்.

## நள்ளிரவில் சுவர் ஏறி குதித்து பெண் வீட்டுக்குள் புகுந்த இன்ஸ்பெக்டர் பணி இடைநீக்கம்

**பெங்களூரு, மார்ச் 20:**

கர்நாடக மாநிலம் தட்சிண கன்னடா மாவட்டம் மங்களூரு அருகே உள்ள மூடபத்ரி போலீஸ் நிலையத்தில் இன்ஸ்பெக்டராக பணியாற்றி வருபவர் சந்தேஷ். இவர் மீது அடுக்கடுக்கான பாலியல் புகார்கள் எழுந்துள்ள நிலையில் தற்போது ஒரு வீடியோ வெளியாகி போலீஸ் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அதன் விவரம் வருமாறு:- சம்பவத்தன்று நள்ளிரவு மைசூரு அருகே உள்ள பகுதியில் இன்ஸ்பெக்டர் சந்தேஷ் ஒரு பெண்ணின் வீட்டின் சுவர் ஏறி குதித்து உள்ளே நுழைகிறார். இந்த காட்சி அங்குள்ள கண்காணிப்பு கேமராவில் பதிவாகியுள்ளது. அந்த பெண்ணுடன் அவர் கள்ளத்தொடர்பில் இருந்ததாகக் கூறப்படுகிறது. தற்போது இந்த வீடியோ காட்சி சமூக வலைதளத்தில் வைரலானது. வழக்கு தொடர்பாக தன்னை பார்க்க வந்த பெண்ணை தன்னுடைய அதி காரத்தை பயன்படுத்தி இன்ஸ்பெக்டர் சந்தேஷ் பாலியல் ரீதியாக துன்புறுத்தியதாக தெரிகிறது. இதுமட்டுமன்றி, பாதிக்கப்பட்ட அந்த பெண்ணின் மகள் மீதும் தவறான எண்ணத்துடன் குறிவைத்ததாக கூறப்படும் ஆடியோ உரையாடல்கள் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இச்சம்பவம் குறித்து மங்களூரு போலீஸ் கமிஷனர் சுதீர்குமார் ரெட்டி தீவிர விசாரணைக்கு உத்தரவிட்டார். மேலும் குற்றம் சாட்டப்பட்ட அதிகாரி மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் பாதிக்கப்பட்ட பெண்கள் யாராவது இருந்தால், எந்தவித அச்சமும் இன்றி துணிச்சலுடன் முன்வந்து புகார் அளிக்கலாம். அவர்களின் அடையாளம் காக்கப்படும் என்று உறுதியளித்தார். இதைதொடர்ந்து இன்ஸ்பெக்டரின் பாலியல் லீலை வீடியோ சமூக வலைதளத்தில் வைரலானதை தொடர்ந்து சந்தேஷை பணி இடைநீக்கம் செய்து கமிஷனர் உத்தரவிட்டார். மேலும் இதுகுறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## இந்தியாவில் 40% பட்டதாரி இளைஞர்களுக்கு வேலையில்லை!

**புதுடெல்லி, மார்ச் 20:**

'இந்தியாவின் வேலைவாய்ப்பு நிலை' குறித்து கர்நாடகத்தின் பெங்களூரைச் சேர்ந்த அசிம் பிரேம்ஜி பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வு முடிவில் இந்த அதிர்ச்சியூட்டும் தகவல் வெளியாகியுள்ளது.

அதன்படி, நாட்டில் 20 முதல் 29 வயதுக்குள்பட்ட 6.3 கோடி பட்டதாரிகளில், சுமார் 1.1 கோடி பேர் வேலையில்லாமல் இருக்கின்றனர். குறிப்பாக, 15 முதல் 25 வயது வரையிலான இளம் பட்டதாரிகளிடையே வேலைவாய்ப்பின்மை விகிதம் 40 சதவீதமாகவும், 25 முதல் 29 வயது பிரிவினரிடையே 20 சதவீதமாகவும் உள்ளது. உயர்கல்வி பயிலுவோரின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வந்தாலும், அவர்களுக்குத் தேவையான அளவுக்குப் புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படவில்லை என்பதே இந்நிலைக்கு முக்கியக் காரணமாகும். கடந்த 2004-05 முதல் 2023 வரையிலான காலகட்டத்தில், ஆண்டுதோறும் சராசரியாக 50 லட்சம் இளைஞர்கள் பட்டதாரிகளாக உருவான நிலையில், அவர்களில் வெறும் 28 லட்சம் பேருக்கு மட்டுமே வேலை கிடைத்ததாக இந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. குடும்பச் சூழல் காரணமாகப் படிப்பைப் பாதியிலேயே கைவிடும் இளைஞர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. 2017-ஆம் ஆண்டில் 58 சதவீதமாக இருந்த இந்தப் போக்கு, 2023-இல் 72 சதவீதமாக உயர்ந்துள்ளது. குடும்ப வருமானத்தைப் பெருக்க இளைஞர்கள் உயர்கல்வியைத் தவிர்த்துவிட்டு, குறைவான ஊதியத்தில் முறைசாரா பணிகளுக்குச் செல்லும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். ஊதிய நிலை, மாற்றங்கள்: ஊதிய விகிதத்தைப் பொருத்தவரை, கல்வி கற்காதவர்களைவிட பட்டதாரிகளின் தொடக்க கால ஊதியம் இருமடங்கு அதிகமாகவே உள்ளது. இருப்பினும், அண்மைக்காலமாக இளம் ஆண் பட்டதாரிகளுக்கான ஊதிய உயர்வு வளர்ச்சி வேகம் குறைந்துள்ளது.

## சமையல் கியாஸ் சிலிண்டர் தீர்ந்து விடவில்லை; காத்திருங்கள்: மத்திய அரசு அறிவுறுத்தல்



**புதுடெல்லி, மார்ச் 20:**

பெட்ரோலிய அமைச்சக இணை செயலாளர் சுஜாதா சர்மா செய்தியாளர்களிடம் கூறியதாவது:- சமையல் கியாஸ் வினியோகம் தடைபட்டு இருக்கும் நிலையில், இயற்கை எரிவாயு வினியோகம் தடையின்றி நடந்து வருகிறது. எனவே சமையல் கியாஸ் பயன்பாட்டாளர்கள் தங்கள் அருகில் நகர எரிவாயு வினியோக நெட்வொர்க் இருக்கும் இடங்களில், இயற்கை எரிவாயு இணைப்புக்கு மாற வேண்டும்.

அனைத்து பழைய விண்ணப்பங்களுக்கும் அனுமான அனுமதிகளை வழங்கினால் 10 சதவீதம் கூடுதல் வணிக கியாஸ் சிலிண்டர் வழங்குதல் உள்ளிட்ட சீர்திருத்தங்கள் தொடர்பாக மாநிலங்களுக்கு கடிதம் எழுதி இருக்கிறோம். இந்த சீர்திருத்தத்தை முன்னெடுத்துச் செல்வதும், ஒப்புதல்களை விரைவுபடுத்துவதும் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் பொறுப்பாகும். நாட்டின் எந்த பகுதியிலும் சமையல் கியாஸ் தீர்ந்து விடவில்லை. அதே நேரம் நிலைமை தொடர்ந்து மோசமாகிக்கொண்டே தான் இருக்கிறது. இறக்குமதி தடைபட்டிருப்பதே இதற்கு காரணம். சிலிண்டர்களுக்கான ஆன்லைன் முன்பதிவு 93 சதவீதமாக அதிகரித்து இருக்கிறது. ஆனால் சமையல் கியாஸ் நிறுவனங்களிடம் நுகர்வோர் வரிசை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. ஆன்லைன் மூலம் முன்பதிவு செய்த வாடிக்கையாளர்கள் காத்திருக்க வேண்டும். உங்கள் வீட்டிலேயே சிலிண்டர் வினியோகிக்கப்படும். பதற்றத்துடன் முன்பதிவு செய்யவோ அல்லது வினியோகஸ்தர்களிடம் செல்லவோ தேவையில்லை. கியாஸ் சிலிண்டர்கள் மீதான அழுத்தத்தை தணிக்க, இயற்கை எரிவாயு இணைப்பை பயன்படுத்துமாறு வணிக நிறுவனங்கள் மற்றும் வீட்டு நுகர்வோரை அரசு ஊக்குவிக்கிறது.

இதற்காக நகர கியாஸ் நிறுவனங்களுக்கு ஊக்கத்தொகை மற்றும் வேகமாக இணைப்புகளையும் வழங்குகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

## பஹல்காம் தாக்குதலில் கொல்லப்பட்டவரின் மகளுக்கு அரசுப் பணி!

ஜம்மு - காஷ்மீரில் 2025, ஏப்ரல் 22 ஆம் தேதியன்று பயங்கரவாதத் தாக்குதல் நடைபெற்றதில் 26 பேர் கொல்லப்பட்டனர். பலியான 26 பேரில் சந்தோஷ் ஜக்தாலே உள்பட மகாராஷ்டிர மாநிலத்தைச் சேர்ந்த 6 பேர் கொல்லப்பட்டனர். இதையடுத்து, கொல்லப்பட்டவர்களின் குடும்பத்துக்கு உரிய இழப்பீடு மற்றும் அரசுப் பணி வழங்கப்படும் என மத்திய அமைச்சர் அமித் ஷா, மகாராஷ்டிர முதலமைச்சர் தேவேந்திர ஃபட்னாவிஸ் மற்றும் துணை முதலமைச்சர் ஏக்நாத் ஷிண்டே ஆகியோர் உறுதியளித்திருந்தனர். முன்னதாக, அரசுப் பணி தருவதாக உறுதியளித்து பல மாதங்கள் கடந்தும் உரிய ஆணை வழங்கப்படவில்லை என சந்தோஷ் ஜக்தாலேவின் மகள் அசாவரி ஜக்தலே கூறியிருந்தார். இந்த நிலையில், புணே மாநகராட்சியில் நிர்வாக அதிகாரியாக அசாவரி ஜக்தாலேவை நியமித்து, புணே மேயர் புதன்கிழமை (மார்ச் 18) அவருக்கு நியமனக் கடிதத்தை வழங்கினார். மேலும், அசாரி முதுகலைப் பட்டம் முடித்த பட்டாதாரி என்பது குறிப்பிடத்தக்கது.




## பணம் இல்லாததால் பூண்டு மூட்டையை தூக்கிச் சென்றார்: மளிகைக் கடைக்குள் புகுந்த கொள்ளையன் கைது

**சென்னை, மார்ச்.20:** மளிகைக் கடைக்குள் புகுந்த கொள்ளையன், எதிர்பார்த்த பணம் இல்லாததால் அங்கிருந்த பூண்டு மூட்டையை திருடிச் சென்றார். மயிலாப்பூர், நடுத்தெருவில் உள்ள ஒரு வீட்டின் முதல் தளத்தில் பாஸ்கர் (52) என்பவர் குடும்பத்தினருடன் வசித்து வருகிறார்.

அவர் அந்த வீட்டின் தரைத் தளத்தில் மளிகைக் கடை வைத்துள்ளார். கடந்த 16-ம் தேதி மதியம் மளிகைக் கடையை மூடி, வீட்டுக்குச் சாப்பிட்டுவிட்டு, கடைக்கு வந்து பார்த்தபோது, உள்ளே இருந்த மளிகைப் பொருட்கள் சிதறி 25 கிலோ பூண்டு மூட்டை திருடப்பட்டிருந்தது.

இது தொடர்பாக, பாஸ்கர் அளித்த புகாரின் பேரில் மயிலாப்பூர் போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்து, கொள்ளையில் ஈடுபட்ட திருவல்லிக்கேணி, கபாலி நகரைச் சேர்ந்த முத்து (50) என்ற கொள்ளையனை கைது செய்தனர்.

மளிகைக் கடை கல்லாப்பெட்டியில் குறைந்த அளவு பணம் இருந்ததால் விரக்தியில் எதையாவது திருட வேண்டும் என்பதற்காக 25 கிலோ பூண்டு மூட்டையை திருடி, அதை ஆட்டோவில் கடத்திச் சென்றதாக போலீஸார் தெரிவித்தனர்.

இதையடுத்து, குற்றச் செயலுக்கு பயன்படுத்திய ஆட்டோவும் பறிமுதல் செய்யப்பட்டது. இவர் மீது ஏற்கனவே 10 திருட்டு வழக்குகள் உள்ளது குறிப்பிடத்தக்கது.

## பிஹார் சிறுமி பாலியல் வன்கொடுமை: அசாம் மாநில இளைஞர் கைது



**சென்னை, மார்ச்.20:** நீலாங்கரையில் பிஹார் சிறுமி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட வழக்கில் அசாம் இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிஹார் மாநிலத்தைச் சேர்ந்த 16 வயது சிறுமி 6 மாதங்களுக்கு முன்பு வேலை தேடி சென்னை வந்துள்ளார். அவர், சென்னை நீலாங்கரையில் தங்கியிருந்து, அங்குள்ள தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வந்தார்.

அப்போது, அங்கு பணியாற்றி வந்த அசாம் மாநிலத்தைச் சேர்ந்த ரூபன் (19) என்பவருடன் பழக்கம் ஏற்பட்டுள்ளது. சமீபத்தில், கொட்டிவாக்கத்தில் உள்ள தனது வீட்டுக்கு சிறுமியை அழைத்துச் சென்ற ரூபன், அவரை பாலியல் வன்கொடுமை செய்ததாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், கடந்த சில நாட்களுக்கு முன்பு அதே நிறுவனத்தில் பணிபுரியும் ரூபனின் நண்பரான நாகாலாந்தைச் சேர்ந்த ஆலன் உசேன் (19) என்பவரும் சிறுமியை வன்கொடுமை செய்துள்ளார்.

அது தொடர்பான வீடியோவை சமூக வலைதளங்களில் வெளியிடப் போவதாக இருவரும் சிறுமியை மிரட்டியுள்ளனர். இதில் பயந்துபோன சிறுமி, நீலாங்கரை மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்.

அதன் அடிப்படையில் போக்சோ சட்டத்தின்கீழ் போலீஸார் வழக்கு பதிவு செய்து, ரூபனை கைது செய்தனர். தலைமறைவான ஆலன் உசேனை தேடி வருகின்றனர்.

## நடுக்கடலில் சிக்கிய 255 கிலோ போதைப் பொருள்: 6 பேரை கைது செய்த இலங்கை கடற்படை



**ராமேசுவரம், மார்ச்.20:** இந்தியப் பெருங்கடல் பகுதியில் 255 கிலோ போதைப் பொருள் கடத்திய 6 பேரை இலங்கை கடற்படையினர் கைது செய்தனர்.

இலங்கையின் மேற்குப் பகுதியிலுள்ள பெருவேளையிலிருந்து 60 கடல் மைல் தொலைவில் இந்தியப் பெருங்கடலில் சந்தேகத்துக்கிடமாகச் சென்ற ஆழ்கடல் மீன்பிடிப் படகை இலங்கை கடற்படையினர் கண்டறிந்து ரோந்து கப்பல் மூலம் சுற்றி வளைத்தனர்.

சோதனையில் படகில் 255 கிலோ போதைப்பொருள் சிக்கியது. மேலும் படகிலிருந்த இலங்கையைச் சேர்ந்த 6 பேரை கடற்படையினர் கைது செய்தனர்.

பறிமுதல் செய்த போதைப் பொருளும், படகும் திக்கோவிட்ட கடற்படை முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டது. மேலும் இந்தப் போதைப் பொருள் எங்கிருந்து கடத்தி வரப்பட்டது, கடத்தலில் தொடர்புடையோர் குறித்து இலங்கை கடற்படையினர் விசாரித்து வருகின்றனர்.

இதுகுறித்து கடற்படையின் மேற்குப் பகுதி தளபதிரியர் அட்மிரல் ஜகத் குமார செய்தியாளர்களிடம் கூறியதாவது: இலங்கை கடற்படை தனது கடல்சார் கண்காணிப்பைத் தீவிரப்படுத்தியுள்ளது.

இதன் விளைவாக கடந்த ஜனவரி மாதத்திலிருந்து தற்போது வரை 7 முக்கிய கடத்தல் படகுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவற்றிருந்து இலங்கை மதிப்பில் ரூ.2 ஆயிரம் கோடி மதிப்பிலான (இந்திய மதிப்பில் ரூ. 600 கோடி) போதைப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு தெரிவித்தார்.

## சத்தியமங்கலம் புலிகள் சரணாலயத்தில் சட்டவிரோதமாக செயல்பட்ட 42 ரிசார்ட்டுகளுக்கு சீல் வைப்பு: வனத்துறை தகவல்

**சென்னை, மார்ச்.20:** சத்தியமங்கலம் புலிகள் சரணாலயத்தில் சட்டவிரோதமாக செயல்பட்ட 42 ரிசார்ட்டுகளுக்கு வனத்துறை சீல் வைத்துள்ளது. சத்தியமங்கலத்தில் சட்டவிரோதமாக செயல்படும் ரிசார்ட்களால் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுவதாக ஐகோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

சட்டவிரோத ரிசார்ட்டுகளை அகற்றி நடவடிக்கை எடுக்கவும், அறிக்கை தரவும் ஐகோர்ட் உத்தரவிட்ட நிலையில் சத்தியமங்கலம் சுற்றுச்சூழல் பாதுகாப்பு பகுதியில் 53 ரிசார்ட்டுகள், பண்ணை வீடுகளில் சோதனை நடத்தப்பட்டு, 11 ரிசார்ட்டுகள் உரிய அனுமதி பெற்று செயல்பட்டு வந்தது கண்டுபிக்கப்பட்டதாக ஐகோர்ட்டில் வனத்துறை தகவல் தெரிவித்துள்ளது.

## தமிழகத்தில் 8.65 லட்சம் முதியோர், மாற்றுத் திறனாளிகள் வீட்டிலிருந்தே வாக்களிக்க படிவம் விநியோகம்



**சென்னை, மார்ச்.20:** தமிழகத்தில் உள்ள முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் 8.65 லட்சம் பேர் வீட்டிலிருந்தே வாக்களிப்பதற்கான படிவங்கள் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்களிக்க, வாக்குச்சாவடிக்கு வர முடியாத 85 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் மற்றும் 40 சதவீதத்துக்கு மேல் உடல் பாதிப்புடைய மாற்றுத் திறனாளிகளுக்கு வீட்டிலிருந்தே தபால் வாக்கு மூலம் வாக்களிக்க தேர்தல் ஆணையம் அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கு, தேர்தல் அறிவிப்பு வெளியான நாளிலிருந்து 5 நாட்களுக்குள் தொடர்புடைய தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலருக்கு 12டி படிவம் மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.

தமிழகத்தில் தற்போது, 85 வயதுக்கு மேற்பட்டவர்கள் 4 லட்சம் பேர், 100 வயதுக்கு மேற்பட்ட வாக்காளர்கள் 2,530 பேர், மாற்றுத் திறனாளிகள் 4.63 லட்சம் பேர் என மொத்தம் 8.65 லட்சம் பேர் உள்ளனர்.

இவர்கள் தபால் வாக்கு செலுத்த ஏதுவாக, வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் தகுதியுள்ள வாக்காளர்களின் வீடுகளுக்குச் சென்று படிவங்களை வழங்கி, பூர்த்தி செய்த படிவங்களை பெற்று வருகின்றனர்.

வீட்டில் இல்லாதவர்களின் வீடுகளுக்கு மீண்டும் ஒருமுறை செல்ல உள்ளனர்.

2 முறையும் வாக்காளர் வீட்டில் இல்லையெனில், அவர் தபால் வாக்களிக்க விருப்பமற்றவராகக் கருதப்படுவார் என்று தேர்தல் நடத்தும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பின்னர், இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்ட பிறகு, ஒவ்வொருவரின் வீடுகளுக்கு சென்று, வாக்குச்சாவடி அமைப்பை ஏற்படுத்தி, வாக்களிக்க வைப்பதற்கான ஏற்பாடுகளை அந்தந்த தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஆந்திர மாநில காரில் 12 கிலோ வெள்ளி பொருட்கள் சிக்கின: சென்னையில் ரூ.1.52 கோடி பறிமுதல்



**சென்னை, மார்ச்.20:** உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்பட்ட ரூ.1.52கோடி ரொக்கப் பணத்தை சென்னை மாவட்டத்தில் தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் நேற்று பறிமுதல் செய்தனர்.

தமிழக சட்டப் பேரவைத் தேர்தலையொட்டி சென்னையில் தேர்தல் பறக்கும் படையினர் தீவிர வாகனச் சோதனையில் ஈடுபட்டுள்ளனர்.

அதன்படி சேப்பாக்கம் -திருவல்லிக்கேணி சட்டப் பேரவை தொகுதிக்கு உட்பட்ட சேப்பாக்கத்தில் உள்ள சுவாமி சிவானந்தா சாலையில் நேற்று காலை தேர்தல் பறக்கும் படையினர் தீவிர வாகனச் சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது அந்த வழியாக வந்த ஆந்திர பதிவெண் கொண்ட கார் ஒன்றை மறித்து சோதனையிட்டனர். அதில் 12 கிலோ எடையுள்ள வெள்ளி குத்துவிளக்கு, தட்டு உள்ளிட்ட பொருட்கள் இருந்தது தெரியவந்தது.

காரில் வந்தவர் சென்னை கிழக்கு கடற்கரை சாலையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றுக்காக வெள்ளிப் பொருட்களை கொண்டு சென்றதும், நிகழ்ச்சி முடிந்து வெள்ளிப் பொருட்களுடன் ஆந்திரா திரும்புவதும் தெரியவந்தது. உரிய ஆவணங்கள் இல்லாததால் அவை பறிமுதல் செய்யப்பட்டன.

சென்னை எல்லீஸ் சாலை - வாலாஜா சந்திப்பு அருகே நேற்று மாலை துறைமுகம் தொகுதி தேர்தல் பறக்கும் படை அதிகாரி ராஜேந்திரன் தலைமையிலான குழுவினர் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது, இருசக்கர வாகனத்தில் வந்த நபரை பிடித்து சோதனை செய்தபோது கட்டுக்கட்டாக ரூ.35 லட்சம் பணம் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

அவர் சென்னை ஏழு கிணறு பர்தயார் தெருவை சேர்ந்த அனில்குமார் சிங் (47) என்பதும், ஜி.பி சாலையில் இருந்து பணத்தை வாங்கிக் கொண்டுசவுக்கார்பேட்டையில் உள்ள ஒருவரிடம் கொடுக்கச் சென்றதாக கூறினார்.

பணம் அசோக் நகரை சேர்ந்த பைனான்சியர் கமல் (55) என்பவருக்கு சொந்தமானது என்றும் தெரியவந்தது. ஆனால், உரிய ஆவணங்கள் இல்லாததால் ரூ.35 லட்சத்தை கைப்பற்றி வருமான வரித்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

தம்பதியிடம் ரூ.65,000 பறிமுதல் நெய்வேலியைச் சேர்ந்த கணேசன் என்பவர் தனது மனைவியுடன் நேற்று காரில் சிந்தாதிரிப்பேட்டை காசினோ திரையரங்கம் அருகே வந்துள்ளார்.

தேர்தல் பறக்கும் படையினர் அந்த காரை நிறுத்தி சோதனை செய்தனர். தம்பதியரிடம் இருந்த ரூ.65 ஆயிரத்தை பறிமுதல் செய்தனர். அது வாடகை வீட்டுக்கான முன்பணம் என்று கூறப்பட்டது. ஆனால், உரிய ஆவணம் இல்லாததால் பணம் பறிமுதல் செய்யப்பட்டது.

சென்னை மாவட்டத்துக்கு உட்பட்ட பகுதியில் நேற்று ஒரே நாளில் உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்பட்ட ரூ. 1.52 கோடி ரொக்கம் பறிமுதல் செய்து, கருவூலத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## வேளாண் பொருட்களுக்கு ஊக்கத் தொகை: மத்திய அரசின் உத்தரவுக்கு விவசாயிகள் சங்கம் கண்டனம்



**சென்னை, மார்ச்.20:** விவசாயிகள் விளைவிக்கும் வேளாண் பொருட்களுக்கு மத்திய அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச ஆதார விலையை விட, மாநிலஅரசுகள் கூடுதலாக ஊக்கத்தொகை வழங்கக் கூடாது என, மத்திய அரசு பிறப்பித்துள்ள உத்தரவுக்கு, தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, சங்கத்தின் பொதுச்செயலாளர் பி.எஸ். மாசிலா மணி வெளியிட்ட அறிக்கை: கேரள மாநில எம்.பி. ஜான் பிரிட்டாஸ் நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்கு, பதிலளித்த மத்திய நிதித்துறை அமைச்சகம், விவசாயிகள் விளைவிக்கும் பொருட்களுக்கு மத்திய அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச ஆதார விலைக்கு மேல் மாநில அரசுகள் எவ்வித கூடுதல் தொகையையும் வழங்கக் கூடாது என்று, அனைத்து மாநில தலைமை செயலர்களுக்கும் ஏற்கனவே கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

மேலும், கேரளா போன்ற மாநிலங்கள் தற்போது வழங்கி வரும் ஊக்கத் தொகையை நிறுத்துவது குறித்து பரிசீலிக்க வேண்டும். நாடு முழுவதும் 22 விளைபொருட்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு மேல் எவ்வித தொகையையும் அரசு ஆதரிக்கவில்லை என்றும் மத்திய அரசு திட்டவட்டமாக கூறியுள்ளது.


வேளாண் விளைபொருட்களுக்கான உற்பத்தி செலவு என்பது நாடு முழுவதும் ஒரே சீராக இருப்பதில்லை.

மாநிலத்திற்கு மாநிலம் மாறுபடும் நிலையில், முதலீட்டுக்கான வட்டி, குடும்ப உழைப்பு உள்ளிட்ட அனைத்து செலவுகளையும் கணக்கில் கொள்ளாமல், ஒரு பகுதியை மட்டும் கணக்கிட்டு அறிவிக்கப்படும் விலையால் விவசாயிகள் பெரும் இழப்பைச் சந்தித்து வருகின்றனர்.

இந்த இழப்பை ஈடுகட்டவே, அந்தந்த மாநில அரசுகள் தங்களின் நிதி நிலைமைக்கு ஏற்ப ஊக்கத் தொகைகளை வழங்குகின்றன. எனவே, விவசாயிகளைப் பாதிக்கும் இந்த உத்தரவை மத்திய அரசு உடனடியாக கைவிட வேண்டும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## வீடுகளில் உயிரிழப்பு நிகழ்ந்தாலும் இறப்புக்கான காரணத்தை மருத்துவர் மூலம் உறுதி செய்து சான்றிதழ்

### சுகாதாரத் துறை திட்டம்



**சென்னை, மார்ச்.20:** வீடுகளில் உயிரிழப்பு நிகழ்ந்தாலும், இறப்புக்கான காரணத்தை மருத்துவர் மூலம் உறுதி செய்து சான்றிதழ் வழங்குவதை செயல்படுத்த தமிழக பொது சுகாதாரத் துறை முடிவு செய்துள்ளது.

தமிழகத்தில் ஆண்டுதோறும் சுமார் 6.96 லட்சம் உயிரிழப்புகள் நிகழ்கின்றன. அதில், 23 சதவீதம் மருத்துவமனையில் சிகிச்சையில் இருக்கும் போதும், 73 சதவீதம் வீடுகளிலும் நடக்கிறது. 4 சதவீதம் எதிர்பாராத விபத்துகள் காரணமாக உள்ளது.

இந்நிலையில், இறப்புக்கான முழுமையான காரணங்களை கண்டறிந்து, அப்பகுதியில் முன்னெச்சரிக்கை தடுப்பு பணிகள் செய்யும் ஆய்வை தமிழக பொது சுகாதாரத்துறை மேற்கொண்டு வருகிறது.

இறப்புக்கான காரணங்கள் பதிவு

முதல்கட்டமாக, கரூர், கிருஷ்ணகிரி மாவட்டங்களில் 2023-ம் ஆண்டுகளில் இறந்தவர்களின் விபரங்கள் சேகரிக்கப்பட்டன. அதில், எவ்வித காரணமும் இன்றி, வயது மூப்பு காரணமாக இறந்தனர் என குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களின்படி, இறந்தவர்களின் வீடுகளுக்கு சென்று, இறப்புக்கான நோய் உள்ளிட்ட காரணங்கள் பதிவு செய்யப்படுகிறது.

இதுதொடர்பாக, பொது சுகாதாரத்துறை அதிகாரிகளிடம் கேட்ட போது, "உலக சுகாதார நிறுவனம், இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலுடன் இணைந்து, கரூர், கிருஷ்ணகிரி மாவட்டங்களில், வீடுகளில் இறந்தவர்களின் விபரங்கள் அடிப்படையில், அவர்களின் இறப்புக்கான காரணம் பதிவு செய்யப்பட்டது.

அதில், 98 சதவீதம் இறப்புக்கான காரணம் கண்டறிந்ததில், 20 சதவீதம் வரை இதய நோயாலும், 7 சதவீதம் நீரிழிவு நோய் போன்றவற்றாலும் இறப்புகள் நிகழ்ந்திருப்பது தெரிய வந்துள்ளது.

**விழிப்புணர்வு நடவடிக்கை:** வரும் காலங்களில் வீடுகளில் இறந்தாலும், இறப்புக்கான காரணத்தை மருத்துவர் மூலமாக உறுதி செய்து சான்றிதழ் வழங்குவது கட்டாயமாக்கப்படும். இறந்தவர்களின் இறப்புகளை முறையாக பதிவு செய்யுமாறு அனைத்து சுகாதார அதிகாரிகளுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த புள்ளி விபரங்கள் மூலம் ஒரு பகுதியில் அதிகப்படியாக இறப்புக்கான காரணத்தை கண்டறிந்து, அங்கு விழிப்புணர்வு தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்" என்றனர்.

## தமிழகத்தில் அடுத்த பருவமழை தொடங்கும் முன்பு சீமை கருவேல மரங்களை வேரோடு அகற்ற ஐகோர்ட் உத்தரவு



**மதுரை, மார்ச்.20:** தமிழகத்தில் அடுத்த பருவமழை தொடங்கும் முன்பு சீமைக் கருவேல மரங்களை அகற்றவும், இப்பணியை மேற்பார்வையிட ஓய்வுபெற்ற நீதிபதிகளை நியமனம் செய்தும் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில் சீமைக் கருவேல மரங்களை அகற்றக் கோரி மதிமுக பொதுச் செயலாளர் வைகோ உள்ளிட்ட பலர் உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் 11 ஆண்டுகளுக்கு முன்பு பொது நல வழக்கு தொடர்ந்தனர்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி சதீஷ்குமார், பரதசக்கரவர்த்தி அமர்வு நேற்று பிறப்பித்த உத்தரவு: தமிழகத்தில் சீமைக் கருவேல மரங்களை இயந்திரம் மூலம் வேரோடு பிடுங்கி அப்புறப்படுத்த வேண்டும்.

சீமைக் கருவேல மரங்கள் அகற்றப்பட்ட இடங்களில் செழுமை கருவூலம் என்ற பெயரில் உள்ளூர் மரங்களை நட்டு பராமரிக்க வேண்டும். சீமைக் கருவேல மரங்கள் அகற்றும் பணிக்காக தனி வலைதளம் தொடங்கி அதில் அனைத்து தகவல்களையும் பராமரிக்க வேண்டும்.

மரங்கள் அகற்றப்பட்டு, அதில் பிற மரங்கள் நடப்பட்டது தொடர்பான புகைப்படங்களையும் பதிவேற்றம் செய்ய வேண்டும். மரக்கன்றுகளை மீண்டும் நடுவதற்கு மாநில அளவில் வனப்பாதுகாவலர், வேளாண்மை இயக்குநரைக் கொண்ட குழு அமைக்கப்படும்.

அவ்வாறு மீண்டும் நடப்படும் மரங்கள் பறவைகளுக்கும் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கும் விறகு போன்ற பயன்பாட்டுக்கும் உதவும் வகையிலான மரங்களாக இருப்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

சீமைக் கருவே மரங்களை ஏலம் விடும் பணியை 4 மாதங்களில் முடிக்க வேண்டும். மேலும் அகற்றும் பணியை 6 மாதங்களில் முடிக்க வேண்டும். கருவேல மரங்கள் இல்லாத பகுதிகளாக அறிவிக்கும் வகையில் இந்த செயல்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

இதேபோல் தனியார் நில உரிமையாளர்கள் தங்கள் நிலங்களில் வளர்ந்துள்ள சீமைக் கருவேல மரங்களை 30 நாட்களில் அகற்ற வேண்டும். தவறினால் அதிகாரிகள் அகற்றி அதற்குரிய கட்டணம் வசூலிக்க வேண்டும்.

அரசுத் துறைகளுக்கு சொந்தமான இடங்களில் வளர்ந்துள்ள கருவேல மரங்களை அகற்ற ஒரே நேரத்தில் நடவடிக்கை எடுக்கவேண்டும். இப்பணிகளை ஒருங்கிணைக்கவும், விரைவுபடுத்தவும், கண்காணிக்கவும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் உள்ளடங்கிய பணிக்குழுக்கள் அமைக்க வேண்டும்.

அகற்றும் பணிகளை மேற்பார்வையிட சென்னை உயர் நீதிமன்ற பகுதிக்கு உட்பட்ட வடக்கு மாவட்டங்களுக்கு ஓய்வுபெற்ற நீதிபதி வி.பாரதிதாசனும், உயர் நீதிமன்ற மதுரை அமர்வுக்கு உட்பட்ட தென்மாவட்டங்களுக்கு ஓய்வுபெற்ற நீதிபதி ஏ.செல்வமும் நியமிக்கப்படுகின்றனர்.

அடுத்த பருவமழை தொடங்குவதற்கு முன்பே அகற்றும் பணியை முடிக்க வேண்டும். அப்போதுதான் பருவமழைக்கு உள்ளூர் தாவர இனங்களை நட்டு வளர்க்க முடியும். இவ்வாறு உத்தரவிட்டு விசாரணையை ஏப்.17-க்கு தள்ளி வைத்தனர்.

# தேர்தல் நாளில் ஊதியத்துடன் கூடிய விடுமுறை: தனியார் நிறுவனங்களுக்கு உத்தரவு



**சென்னை, மார்ச்.20:** தமிழ்நாட்டில் தேர்தல் நாளில் ஊதியத்துடன் கூடிய விடுமுறை அளிக்குமாறு தனியார் நிறுவனங்களுக்கு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில் சட்டப்பேரவைக்கான தேர்தல் ஏப்ரல் 23 ஆம் தேதியில் நடைபெறவுள்ளது. தொடர்ந்து, மே 4 ஆம் தேதியில் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், தேர்தல் நாளில் (ஏப். 4) தனியார் நிறுவனங்கள், தனியார் தொழிற்சாலைகளில் ஊழியர்களுக்கு ஊதியத்துடன் கூடிய விடுமுறை வழங்க வேண்டும் என்று தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

வாக்காளர்கள், தங்கள் ஜனநாயக உரிமையை எந்தவிதத் தடையுமில்லாமல் பயன்படுத்துவதை உறுதி செய்யும்வகையிலும், எந்த அச்சமும் இல்லாமல் வாக்களிப்பதையும் நினைவில்கொண்டு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இதனை மீறும் நிறுவனங்கள் மீது தொழிலாளர் நலத்துறை மூலம் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தேர்தல் ஆணையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேலும், கேரளம், புதுச்சேரி, மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களிலும் அந்தந்த தேர்தல் தேதிகளில் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

# விளாத்திகுளம் சிறுமி பாலியல் கொலை! குற்றவாளியை அடையாளம் காட்டிய நகக்கீறல்!




**தூத்துக்குடி, மார்ச் 20:** தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே பள்ளி மாணவி பாலியல் வன்கொடுமை செய்து படுகொலை செய்யப்பட்ட வழக்கில், முக்கிய குற்றவாளி கைதாகியுள்ளதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

விளாத்திகுளம் அருகே வேடநத்தம் கிராமத்தில் 12-ஆம் வகுப்பு மாணவியை பாலியல் வன்கொடுமை செய்து கொடூரமாக கொலை செய்யப்பட்ட சம்பவம் தமிழ்நாடு முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தியது.

குற்றவாளியைக் கண்டுபிடிக்க மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தலைமையில் 10 தனிப்படைகள் அமைக்கப்பட்டு தீவிரத் தேடுதல் வேட்டை நடைபெற்றது. சந்தேகத்திற்குரிய மற்றும் குற்றப்பின்னணி கொண்ட சுமார் 15-க்கும் மேற்பட்ட நபர்களைப் பிடித்து காவல்துறையினர் ரகசிய இடத்தில் வைத்து விசாரணை நடத்தினர்.

இதனிடையே வழக்கை சிபிஐ-க்கு மாற்ற வேண்டும், இழப்பீடு வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கையை முன்வைத்து சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு தொடரப்பட்டிருந்தது.

இந்த வழக்கு விசாரணையின்போது, சந்தேகத்தின் அடிப்படையில் சிலரின் ரத்த மாதிரிகள் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டிருப்பதாக காவல்துறை விளக்கம் அளித்தது. இந்த நிலையில், முக்கிய குற்றவாளியான சாயல்குடியைச் சேர்ந்த தர்ம முனீஸ்வரன் என்ற இளைஞரை கைது செய்துள்ளதாக காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குற்றவாளி பிடிபட்டது எப்படி?

இந்த வழக்கில் குற்றவாளியை அடையாளம் காண்பதில் அறிவியல் பூர்வமான ஆதாரங்கள் முக்கிய பங்காற்றியுள்ளன.

சந்தேகத்தின் பேரில் காவல்துறையால் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டவர்களில் மூனிஸ்வரனின் கையில் நகக் கீறல்கள் இருந்துள்ளது.

இதனிடையே, உயிரிழந்த மாணவியின் நகங்களுக்குள் சதைத் துணுக்குகள் சிக்கியிருந்தன. அந்த சதையுடன் டிஎன்ஏ பரிசோதனை செய்ததில் முனீஸ்வரனின் மாதிரிகள் ஒத்துப்போனது.

இதனைத் தொடர்ந்து, முனீஸ்வரனை முறையாக கைது செய்து காவல்துறையினர் தீவிர விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

முனீஸ்வரனின் குற்றப் பின்னணி

கடந்த 2020 ஆம் ஆண்டு, தூத்துக்குடி எட்டயபுரம் அருகே, 65 வயது பெண்ணை பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கி கொலை செய்த வழக்கில் முனீஸ்வரன் கைது செய்யப்பட்டார்.

தொடர்ந்து, 2024 ஆம் ஆண்டு அவருக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து உச்ச நீதிமன்றத்தில் முனீஸ்வரனின் மேல்முறையீட்டு மனுவின் விசாரணையில் அவருக்கு ஜாமீன் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# தேர்தல் ஆலோசனை கூட்டம். திமுக வெற்றி வேட்பாளர் சி.வெ.கணேசன் பங்கேற்பு





**கடலூர், மார்ச்.20:** திட்டக்குடி சட்டமன்ற நகர பகுதியில் உள்ள 24 வார்டு செயலாளர்களுடன் சட்ட மன்ற தேர்தல் பணி குறித்து ஆலோசனை கூட்டம் திட்டக்குடி சட்டமன்ற திமுக வெற்றி வேட்பாளர் சி.வெ. கணேசன் தலைமையில் நடந்தது.

திட்டக்குடி பெண்ணாடம் நகர செயலாளர்கள் வி.பி. பரமகுரு, குமரவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் தேர்தல் பணி, தேர்தல் திமுக வேட்பாளர் வெற்றி குறித்து ஆலோசனை செய்யப்பட்டது.

கூட்டத்தில் திமுக நகர ஒன்றிய மாவட்ட மாநில நிர்வாகிகள் அனைத்து நிலை பொறுப்பாளர்கள் மற்றும் கூட்டணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# மானாமதுரை மஹா பஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவி கோவிலில் அமாவாசை யாகம் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்





**மானாமதுரை, மார்ச் 20:** சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள வேதியேரேந்தல் விலக்கில் உள்ள மகா பஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவி கோவிலில் பங்குனி மாதம் பிரத்தியங்கிரா யாகம் வழிபாடு நடைபெற்றது. உலக மக்கள் துன்பத்திலிருந்து விடுபட்டு வாழ்கையில் அணைத்து செல்வகளை பெற்று பேரானந்தத்துடன் வாழ வேண்டிஅமாவாசையன்று பூமிக்கும், சூரியனுக்கும் இடையில் எவ்வித தடையுமின்றி நேரிடைத் தொடர்பு உண்டு என்பதால் அன்றைய தினம் இந்த யாகத்தை *தஞ்சை குருஜி திரு கணபதிசுப்ரமணிய சாஸ்திரிகளின் சீடர்களால்ஸ்ரீ மஹா பஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவிக்கு யாகம் நடைபெற்றது. புனித நீர் கலசங்களை வைத்து நடத்தபடுகிறப்ரத்யங்கிரா யாகத்தில் மிளகு பெருமளவில் ஆகுதி செய்யப்பட்டது விலை உயர்ந்த பட்டுப்புடைவைகள்,மூலிகை பொருட்கள் ,மிளகு,திரவிய பொருட்கள்,பூமாலைகள் பழவகைகள் யாகத்தில் போடப்பட்டது.

அதை தொடர்ந்து வனதுர்கை யாகமும் பின்னர் பூர்ணாஹுதி மற்றும்தீபாரதனை நடைபெற்றது. தொடர்ந்து யாகசாலையிலிருந்து புனிதநீர் கலசத்தை மேலதாளத்துடன் எடுத்துச் செல்லபட்டு ஸ்ரீ மஹா பஞ்சமுகப்ரத்யங்கிரா தேவிக்கு புனித நீர் ஊற்றி அபிஷேகம் விஷேச தீபாராதனை நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாடு செய்தனர். முன்னதாக பஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவி கோவில் நிறுவனர் மரீ ல மரீ ஞான சேகர ஸ்வாமிகள் அனுஷ்டானத்தில் மலர் அலங்காரம் செய்யப்பட்டு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது.

# தில்லை நடராஜர் கோயிலில் சத்ரபதி சம்பாஜி நினைவு நாள் அனுசரிப்பு



**சிதம்பரம் மார்ச் 20:** கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் உள்ள தில்லை நடராஜர் கோயில் இல், People for Dharma மற்றும் பாண்டியர்கள் தேடி பயணம் வரலாற்று ஆய்வு குழு சார்பாக மராட்டிய மன்னர் சத்ரபதி சம்பாஜி அவர்களின் நினைவு நாள் அனுசரிக்கப்பட்டது.

இதனை முன்னிட்டு கோயிலின் நான்கு கோபுரங்களின் உச்சியில் மாட்சித் தீபம் ஏற்றப்பட்டு, அவரின் வீரத் தியாகம் நினைவுகூரப்பட்டது. இந்த நிகழ்வில் தஞ்சாவூர் மராட்டிய இளைய மன்னர் அபாஜி போன்ஸ்லே சத்ரபதி அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

கடந்த நான்கு ஆண்டுகளாக தொடர்ந்து நடைபெற்று வரும் இந்த விழா, வீரர்களின் வரலாற்றை பேணிப் பாதுகாக்கும் முயற்சியாக அமைந்துள்ளது.

இந்நிகழ்வில் பாண்டியர்கள் தேடி பயணம் வரலாற்று ஆய்வு குழு ஒருங்கிணைப்பாளர் மணிகண்டன் விக்னேஷ் மற்றும் People for Dharma அறக்கட்டளை நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## அரசியல் கார்னர்

# 5 தலைநகரங்கள், அனைவருக்கும் அரசு வேலை: நாம் தமிழர் தேர்தல் வாக்குறுதி



**சென்னை, மார்ச்.20:** நாம் தமிழர் கட்சியின் செயல்பாட்டு வரைவு அறிக்கைகளை கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட்டார்.

சென்னை கிண்டியில் தனியார் விடுதியில் நாம் தமிழர் கட்சியின் தேர்தல் அறிக்கை வெளியீடு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

தேர்தல் அறிக்கைகளின்படி, நாம் தமிழர் கட்சி ஆட்சி அமைந்தால், தன்னலமற்ற அன்பான சர்வாதிகார ஆட்சி நடத்தப்படும்.

மக்களின் கருத்துக்கு ஒரு அரசு இயங்க முடியாது; மக்களின் நலனுக்காக மட்டுமே இயங்க முடியும் என்பதே கொள்கை.

தமிழகத்தில் நாம் தமிழர் கட்சி ஆட்சி அமைந்தால், 5 தலைநகரங்கள் உருவாக்கப்படும்.

மதுரையை மொழி, கலை மற்றும் பண்பாட்டுத் தலைநகராகவும், சென்னையை தொழில்நுட்பத் தலைநகராகவும், கோவையை தொழில் தலைநகராகவும், கன்னியாகுமரியை தமிழர் மெய்யியல் தலைநகராகவும், திருச்சியில் நிர்வாகத் துறை தலைநகராகவும் மாற்றப்படும்.

மேலும், தலைமைச் செயலகம் மற்றும் சட்டப்பேரவையை திருச்சிக்கு மாற்றியமைக்கப்படும்.

அனைவருக்கும் அரசு வேலை.

1 முதல் 8 ஆம் வகுப்பு வரையில் பயிற்சி முறைக் கல்வி பயிற்றுவிக்கப்படும்.

பல கோடி பனைத் திட்டம் செயல்படுத்தப்படும்.

குடிநீர் விற்பனைக்குத் தடை விதிக்கப்படும். கடலில் வீணாக 2,300 டிஎம்சி மழைநீர் கலப்பதைத் தடுக்க திட்டங்கள் வகுக்கப்படும்.

இனி படிக்காதவர் இல்லை என்ற நிலையை உருவாக்குவோம்.

மாநில அரசுக்கு அதிக அதிகாரங்களை வழங்கும் வகையில் சட்ட மாற்றங்களுக்காக பாடுபடுவோம்.

மாநிலத்தில் வசூலிக்கப்படும் வரிகளில் மாநிலத்துக்கு 75 சதவிகிதமும், மத்திய அரசுக்கு 25 சதவிகிதமும் வழங்க வலியுறுத்தப்படும்.

வாக்குப்பதிவு கட்டாயமாக்கப்படும் வகையில், 100 சதவிகிதம் வாக்களித்ததற்கான அரசின் சான்றிதழ் இருந்தால் மட்டுமே அரசின் சலுகைகள் வழங்கப்படும்.

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களுக்கு பதிலாக மீண்டும் வாக்குச் சீட்டு முறை கொண்டு வரப்படும்.

3 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு ஒரு நாடாளுமன்ற தொகுதி கொண்டு வரப்படும்.

சட்டப்பேரவை மற்றும் நாடாளுமன்ற தேர்தலில் பெண்களுக்கு தனித் தொகுதி; விளையாட்டுத் துறையில் சம வாய்ப்பும் இடம்பெறும்.

பாலியல் குற்றங்களுக்கு எதிரான கடும் நடவடிக்கைகளாக, குற்றவாளிகளுக்கு மரண தண்டனை வழங்கப்படும்.

மாற்றுத் திறனாளிகளுக்கென தனி அமைச்சகம் அமைக்கப்படுவதுடன், உள்ளாட்சியில் 5 சதவிகித இட ஒதுக்கீடு.

# “தவெகவுடன் பேசவில்லை; ஆதவ் அர்ஜுனா யாரென்றே தெரியாது” - நயினார் நாகேந்திரன்



**சென்னை, மார்ச்.20:** திருநெல்வேலி: “விஜய் கட்சியிலிருந்து எங்களுடன் யாரும் கூட்டணிக்காகப் பேசவில்லை; நாங்களும் அவர்களிடம் பேசவில்லை. ஆதவ் அர்ஜுனா யாரென்றே தெரியாது” என மாநில பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

திருநெல்வேலியில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் ஓரிரு நாட்களில் தமிழகம் வருவதற்கான வாய்ப்புகள் உள்ளது. அவர் வரும்போது கூட்டணிப் பேச்சுவார்த்தை நடைபெறும். மற்றபடி, தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை குறித்து பின்னர் அறிவிப்போம். தேர்தலுக்கு இன்னும் நாட்கள் உள்ளன. வேட்பு மனு தாக்கல் செய்யவே 10 நாட்கள் அவகாசம் உள்ளது.

அமலாக்கத் துறை உள்ளிட்ட அமைப்புகளை வைத்து யாரையும் மிரட்ட வேண்டிய அவசியம் எங்களுக்குக் கிடையாது. அமலாக்கத் துறை, வருமான வரித் துறை ஆகியவை சுதந்திரமான அமைப்புகள். பிரச்சினையில் சிக்கியவர்கள் மீதுதான் இந்த அமைப்புகள் விசாரணை நடத்தும். புதிதாக வழக்குப் பதிவு செய்தால் அமலாக்க துறையை வைத்து நாங்கள் மிரட்டுவதாகச் சொல்லலாம், ஆனால், கடந்த தேர்தலுக்கு முன்னரே தற்போது விசாரணை நடக்கும் அனைவர் மீதும் அமலாக்கத் துறை வழக்கு பதிவாகியுள்ளது. விஜய் கட்சி ஆரம்பிப்பதற்கு முன்னால் அவர் மீது அமலாக்கத் துறை, வருமான வரித் துறை வழக்குகள் உள்ளது. 10 ஆண்டுகளுக்கு முன்பே திமுகவினர் சிலர் மீது வழக்கு இருக்கும் சூழலில், அதை வைத்து மிரட்டுவதாக இப்போது சொன்னால் சரியானதாக இருக்குமா?

நீங்கள் சொல்லும் யாருடனும் நாங்கள் கூட்டணிப் பேச்சுவார்த்தை நடத்தவில்லை என்பதை பாஜக மாநிலத் தலைவர் என்கிற முறையில் தெரிவித்துக் கொள்கிறேன். விஜய் கட்சியில் இருந்தும் எங்களிடம் பேச்சுவார்த்தை நடத்தவில்லை அப்படி இல்லாத பட்சத்தில் ‘பிம்பம், கம்பம்’ என்பதெல்லாம் தேவையில்லாதது. இவ்வாறு நயினார் நாகேந்திரன் கூறினார்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, E-MAIL: ANANDABHASKARNEWS@GMAIL.COM